விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 12 திங்கட்கிழமை (26.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

# யாழ். மேயர் யார்?
# இன்று பலப்பரீட்சை

## மும் முனைப் போட்டி

**(யாழ்ப்பாணம்) யாழ். மாநகர சபை முதல்வர் பதவிக்கு மூன்று கட்சிகளுக்கு இடையே பலத்த போட்டி நிலவிவரும் நிலையில் இன்று அதற்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இந்த வாக்கெடுப்பு உறுப்பினர்களின் கருத்தின்படி இரகசிய வாக்கெடுப்பா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பா? என முடிவு செய்யப்பட்டு வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.**

உள்ளூராட்சி சபைகளின் முதல்வர், பிரதி முதல்வரை தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. அந்தவகையில் யாழ்.மாநகரசபை மற்றும் சாவகச்சேரி நகரசபைக்கான முதல் அமர்வு இன்று இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகர சபை மேயர் பதவிக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் இ. ஆனோல்ட்டும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் சட்டத்தரணி மணிவண்ணனும், ஈழமக்கள் ஜனநாயக கட்சி சார்பில் மு.ரெமீடியஸும் முதல்வர் வேட்பாளர்களாக தத்தமது கட்சியால் தெரிவாகியுள்ளனர்.

தமிழரசுக் கட்சி சார்பாக யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளர் தெரிவில் இறுதி வரை பல குழப்பங்கள் நிலவி 23

## ரெமீடியஸை முன்னிலைப்படுத்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவில் இழுபறி ஏற்பட்டு வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டால் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) சார்பில் மு.ரெமீடியஸ் முன்னிலைப்படுத்தப்படுவார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழரசுக் கட்சியின் இ.ஆர்னோல்ட்டுக்கு எதிர்ப்பு வலுவாக இருப்பதால் இந்நிலைமை தமது கட்சிக்கு சார்பாக அமையலாம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கருதுவதாகவும் தெரிவிக்கபடுகின்றது.(மு)

## ஈ.பி.டி.பி ஆதரவை பெற தமிழரசுக் கட்சி கடும் பிரயத்தனம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்பு கொண்டு ஆர்னோல்ட்டை மேயராக்கி விட வேண்டும் என தமிழரசுக் கட்சி தலைவர்கள் கடும் பிரயத்தனத்தனத்தில் ஈடுபட்டுள்ளனர்.(மு)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

மாலபே பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மாலபே - சந்திரிகா குமாரதுங்க மாவத்தையில் குறித்த துப் 23

## வெட்டுக் காயத்துடன் இளைஞன் பரு.வைத்தியசாலையில் அனுமதி

### பொலிஸ் உத்தியோகத்தர் மீது குற்றச்சாட்டு

(கரணவாய்)

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கத்தி வெட்டுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்படும் இளைஞன் ஒருவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை கலட்டிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் எல்லை ஒழுங்கை, தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த மார்க்கண்டு உத்தரன் (வயது 25) என்ற இளைஞனே இடது கையில் இரண்டு வெட்டுக் காயங்களுடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை மேற்படி இளைஞன் 23

## க.பொ.த சா/த பெறுபேறுகள் நாளை மறுதினம்

(கொழும்பு)

2017ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நாளை மறுதினம் புதன்கிழமை வெளியிடுவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் பி. சனத் பூஜித தெரிவித்தார். 23

## ஆனந்த சுதாகரனை விடுவிக்க வலியுறுத்தி கையெழுத்து பதிவு



(முல்லைத்தீவு)

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று முல்லைத்தீவில் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

இந்த கையெழுத்து வேட்டையை தமிழ் இளையோர் அமைப்பு 24

## யாழ். முட்டாஸ் கடைச் சந்தியில் பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை பிரதான வீதி, முட்டாஸ் கடை சந்தியில் அமைந்துள்ள கடை ஒன்றின் மீது நேற்று பெற்றோல் குண்டு தாக்குதல் மேற் 23



## அநாவசிய அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம்

### அரசு கடுப்பு

(கொழும்பு)

நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களில் தமிழர் தரப்பின் ஒத்துழைப்பு பூரணமாக கிடைத்து வருகின்றமை அரசாங்கத்திற்கு கிடைத்த வெற்றியாகும். எனினும் தீர்வுகள் குறி 23

## இன்று மகிழ்ச்சியாக இருக்கும் கே.பி அன்று கொழும்பு வந்தபோது நடுங்கினார்!

### பிரபாகரனை புத்திசாலி என்றும் கூறமாட்டேன் என்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ



(கொழும்பு)

கே.பி எனப்படும் செல்வராசா பத்மநாதன் வெளிநாட்டில் இருந்து கொழும்புக்கு கொண்டு வரப்பட்டபோது நடுங்கிக் கொண்டிருந்தார். அவர் அதுதான் தனது கடைசித் தருணம் என்று நினைத்தார்.

அவர் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறார். ஏனென்றால் அவருடைய கடந்த கால மற்றும் தவறுகளை புரிந்து கொள்ள நாங்கள் தயாராக இருந்தோம் 23

## அஸ்கிரிய பீடத்திடமும் மனு கையளிப்பு



(கண்டி)

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன், கண்டி அஸ்கிரியபீட மகாநாயக்க தேரரிடம் மனு ஒன்றை 23

# பிரதமர் மீதான பிரேரணைக்கு கட்சியைப் பிளவுபடுத்தாத தீர்மானம்

## சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு

(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது எப்படி வாக்களிப்பது என்பதை தீர்மானிக்காவிடினும், கட்சியைப் பிளவுபடுத்தாமல் இருக்கும் வகையில் தீர்மானம் ஒன்றை கட்சி எடுக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட்டு உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவான 29 உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் அமைச்சர் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் மகிந்தவுக்கு ஆதரவாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராகவும் செயற்படும் சிலர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானம் எடுக்கும் போது இவர்களை மறந்து தீர்மானம் எடுத்தால், இவர்கள் கட்சியிலிருந்து விலகிச் செல்லும் நிலைமை உருவாகும்.

கட்சி பிளவுபட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு காரணமாக அமையப் போகிறது என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். (மு-1)

# வலயக்கல்விப் பணிப்பாளரின் மணிவிழா எதிர்வரும் முதலாம் திகதி

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா அவர்களின் மணிவிழா எதிர் வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ந.தெய்வேந்திரராஜா அவர்கள் நாளை மறுதினம் 28ஆம் திகதி 60 வயதை நிறைவு செய்து பணியிலிருந்து ஓய்வு பெறுவதையொட்டி இம் மணிவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராகவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளராகவும் பணியாற்றியிருந்த ந.தெய்வேந்திரராஜா அவர்கள் 30 ஆண்டுகள் கல்விச் சேவையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

# சாவகச்சேரியில் 8 கிலோ கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் மற்றும் சாவகச்சேரி பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் யாழ் சாவகச்சேரி பகுதியில் வைத்து கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இவர்களிடமிருந்து எட்டு கிலோ கஞ்சாவையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த நபர்கள் கஞ்சாவை விற்பனை செய்யும் நோக்கில் கடத்திச் சென்ற நிலையில் இந்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், கடத்தலிற்கு பயன்படுத்தப்பட்ட ஹயஸ் ரக வாகனம் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் அல்வாய் பகுதியைச் சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பதாகவும், விசாரணையின் பின்னர் குறித்த நபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு-1)

# மேலதிகமாக 2000 பேருந்துகள் புத்தாண்டை முன்னிட்டு சேவையில்!

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சொந்த இடங்களுக்குச் செல்லும் பொதுமக்களின் வசதி கருதி, இலங்கை போக்குவரத்துச் சபை மேலதிகமாக இரண்டாயிரம் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த உள்ளது.

இதற்கு தேவையான மேலதிக பஸ்கள் நுவரெலியா, கண்டி, பதுளை உள்ளிட்ட பிரதேச அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பி.எச். ஆர்.டி.சந்திரசிறி தெரிவிக்கையில், எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரையில் இந்த பஸ் சேவைகள் இடம்பெறும்.

கொழும்பு புறக்கோட்டை மத்திய பஸ்தரிப்பு நிலையம் மற்றும் பிரதேச அலுவலகங்களில் முன்னெடுக்கப்படும் என்றார்.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு உட்பட்ட 103 டிப்போக்களை உள்ளடக்கிய வகையில், இந்த விசேட பஸ்சேவைகள் இடம்பெறும்.

நிறுவன வலயத்திற்கு அருகாமையில் இந்த பஸ் சேவை முன்னெடுக்கப்படும் என்று பிரதிப் பொது முகாமையாளர் பி.எச்.ஆர். டி.சந்திரசிறி குறிப்பிட்டார். (மு-1)

# மாகாண சபைத் தேர்தலை விகிதாசார முறையில் நடத்துக!

## பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

மாகாணசபைகளுக்கான தேர்தல் விகிதாசார தேர்தல் முறையில் நடத்தப்பட வேண்டும் என குறிப்பிட்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி, முடிவடைந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பணத்துக்காக கொள்கைகளை மாற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார்.

தேர்தல் காலங்களில் இணைந்து செயற்பட்ட கட்சிகள் உள்ளூராட்சி சபைகளை இணைந்து நிறுவுவதில் இணக்கத்தை காட்ட மறுத்துள்ளன.

முக்கியமாக கட்சிகள் பணத்துக்காக தனது கொள்கைகளை மாற்றக்கூடிய சூழ்நிலை எழுந்துள்ளது.

மில்லியன் கணக்கான தொகை பணம் இதற்கென செலவிடப் படுவதாக தகவல்கள் கிடைக்க பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (மு-1)

# முல்லைத்தீவு விபத்தில் ஒருவர் படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, இரட்டைவாய்க்கால் பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின்போது முச்சக்கரவண்டியின் சாரதியே படுகாயமடைந்துள்ளதாகவும், அவர் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும், சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

பாடசாலை அதிபர், ஆசிரியருக்கு தரம் 1 முதல் தரம் 11 வரையான 2018 இல் மாணவர் கணிப்பீட்டறிக்கை
தேர்ச்சியறிக்கை வெளிவந்து விட்டது
உடன் பெற்றுக்கொள்ளலாம்
தயா அச்சகம்
(3380)
0773965214

ஆட்டோ தேவை
வீட்டுப் பாவனைக்கு 2 Strock ஆட்டோ வீட்டு / அலுவலக பாவனையில் இருந்தது விரும்பத்தக்கது. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 847 0610
(3379)

# 31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.02.2018 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

**புஸ்பலதா (லதா) சிவகுமாரன்**

(சிங்கக்குட்டி) (ஆசிரியை)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (27.03.2018) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.109, 10ம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி.

(C-1998)

இங்ஙனம் : குடும்பத்தினர்

# மரணஅறிவித்தல்

## திருமதி ஆழ்வியம்மா கிட்டிணன்



மலர்வு : 05.04.1932 உதிர்வு : 25.03.2018

வளர்மதி, கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆழ்வியம்மா கிட்டிணன் அவர்கள் நேற்று (25.03.2018) ஞாயிறு அன்று காலமானார். அன்னார் கந்தப்பு கிட்டிணன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரர் பத்தினி தம்பதிகளின் பாசமிகு மகளும் குலசேகரன் (ஓய்வு நிலை பிரதேச முகாமையாளர், இலங்கை வங்கி), அமரர் சிவநேசன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு), கருணாகரன் (நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி, தனலட்சுமி (ஆசிரியை, யா/இமையாணன் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், இரஞ்சினி, சோதிமலர், கந்தப்பு (ஓய்வு நிலை உதவி பொலீஸ் பரிசோதகர்), இந்துமதி, விமலநாதன் (கிளை முகாமையாளர், கட்டைவேலி, ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று காலை 10.30 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3382)

வளர்மதி, கரவெட்டி மத்தி, கரவெட்டி.

குலசேகரன் - 0771281361
கருணாகரன் - 0776354240

தகவல் : குடும்பத்தினர்.

# ஜனாதிபதித் தேர்தலில் நேரடிப் பிரசாரம்-மகிந்த




(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலின் போது நேரடிப் பிரச்சாரத்தில் ஈடுபட போவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது கூட்டு எதிர்க்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனயின் சார்பில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளருக்காக நேரடியாக பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பிரசாரத்தில் ஈடுபட்டதனைப் போன்றே தாம் ஜனாதிபதி தேர்தலிலும் நேரடியாக களத்தில் இறங்கிப் பிரசாரம் செய்ய உள்ளதாகத் தெரிவித்துள்ளார். கூட்டு எதிர்க்கட்சி மற்றும் பொதுஜன முன்னணியினால் தெரிவு செய்யப்படும் வேட்பாளரின் சார்பில் பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



(5 ஆம் பக்கம் பார்க்க...)

# புதிய அரசியல் அமைப்பு தமிழருக்கு அரசியல் தீர்வல்ல

## பந்துல எம்.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்தின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது இனத்தின் அபிலாஷைகளை அறிந்து செயற்பட வேண்டும். பிரதமரின் நிர்வாகத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் கடந்த மூன்று வருடகாலமாக நிலையான அபிவிருத்திகள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அதேவேளை நாட்டை பிரித்து இனங்களுக்கிடையில் மீண்டும் விரோதங்களை ஏற்படுத்தும் புதிய அரசியலமைப்பினை உருவாக்கும் விடயத்திற்கு மாத்திரம் தமிழ் தேசிய கூட்டமைப்பு முக்கியத்துவம் கொடுக்காமல் தமது இனமக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விடயத்திலும் கூடுதல் கவனம் செலுத்துவதே அம் மக்களுக்கான அரசியல் தீர்வாக அமையும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு ஸ்ரீவஜிராஸ்ரம விகாரையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இனக்கலவரங்கள் இனிமேல் இலங்கையில் இடம்பெறாது!

## பாகிஸ்தான் பிரதமருக்கு ஜனாதிபதி விளக்கம்



(இஸ்லாமாபாத்)

கண்டி கலவரங்கள் போன்று இனி கலவரங்கள் நடைபெறாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன் னெடுத்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தான் பிரதமரிடம் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்திலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

கண்டிக் கலவரம் குறித்து தான் கவலையடைவதாகவும், எனினும், அதனைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை கச்சிதமாக முன்னெடுத்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். நிலைமை தற்பொழுது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கலவரத்தில் ஈடுபட்டோர் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாகிஸ்தான் பிரதமரிடம் தெளிவுபடுத்தினார். (இ-7)

# மே தின ஊர்வலம் வேண்டாம் 4 மகாநாயக்க தேரர்கள் பிரதமரிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

இந்த வருடத்துக்கான மே தினம் வெசாக் வாரத்துக்குள் அமையப் பெற்றுள்ளதனால், மே தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் ஊர்வலங்கள், நிகழ்வுகள் அனைத்தையும் ஒத்திவைக்குமாறு நான்கு மகாநாயக்க தேரர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு மே தின ஊர்வலங்களை நடத்துவது வெசாக் வாரத்தில் இடம்பெறும் பௌத்த சமய நடவடிக்கைகளுக்கு இடையூறாக உள்ளதாகவும் மகாநாயக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனால், வெசாக் வாரம் நிறைவடையும் வரையில், அதாவது ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி முதல் மே மாதம் 3 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நாட்டில் மே தின ஊர்வலங்கள், கூட்டங்கள் என்பனவற்றைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பிரதமரிடம் மகாநாயக்கர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மகாநாயக்கர்களின் இந்த வேண்டுகோளை ஏனைய தரப்பினருடன் கலந்தாலோசித்து ஒரு வாரத்துக்குள் அறியத்தருவதாக பிரதமர் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## சூடு பிடிக்கும் அரசியல் களம்

# இலக்கு வைக்கப்படும் ஜனாதிபதித் தேர்தல்

(கொழும்)

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் புதிய வேட்பாளர் ஒருவர் போட்டியிடப் போவதாக, இராஜாங்க அமைச்சர் திலிப் வெதாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வழங்கப்பட்ட மக்கள் தீர்ப்பே இவ்வாறான மாற்றத்தை மேற்கொள்ளவுள்ளமைக்குக் காரணமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் தற்போது ஐக்கிய தேசியக் கட்சியிலும் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனால் பதவிகளிலும் மாற்றம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுகின்றதென திலிப் வெதாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கப் போவதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத்தளபதியும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் அமைச்சர் திலிப் வெதாராச்சியும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் புதிய வேட்பாளர் ஒருவர் போட்டியிடவுள்ளார் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரணில் மீது நம்பிக்கையில்லை

# ஐ.தே.க.எம்.பிக்களுக்கு இறுக்கமான உத்தரவு!

(கொழும்பு)

ஏப்ரல் முதல் வாரத்தில் வெளிநாடுகளுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும், மருத்துவ தேவைகளுக்காக செல்வோர் முன்கூட்டியே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள அனைத்து எம்.பிக்களும் சபையில் பிரசன்னமாக வேண்டும் என்றும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை மீது எதிர்வரும் 4ஆம் திகதி விவாதம் நடைபெறவுள்ளது.

கூட்டரசிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் இறுதி நேரத்தில் காலைவாரும் வகையில் செயற்பட்டால் அதை முறியடிக்கும் முகமாகவே ஐ.தே.க வால் இந்த வியூகம் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# அணித்தலைவர் பதவியிலிருந்து சிமித் நீக்கப்பட்டு பெய்ன் நியமனம்



தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் கேப்டவுன் நியூலேண்டில் நடைபெற்றது.

3ஆவது நாள் ஆட்டத்தின் போது தென்னாபிரிக்கா துடுப்பாட்டம் செய்து கொண்டிருந்தது. அப்போது அவுஸ்திரேலியாவின் தொடக்க வீரர் பான்கிராப்ட் ஒரு வகை பொருளைக் கொண்டு பந்தை சேதப்படுத்தியது கேமரா மூலம் தெரியவந்தது.

இந்த பிரச்சினை பெரிய அளவில் வெடித்தது. பான்கிராப்ட் பந்தை சேதப்படுத்தியதை அணித் தலைவர் ஸ்மித் ஒத்துக் கொண்டார். இதனால் அவருக்கு நெருக்கடி ஏற்பட்டது.

அவுஸ்திரேலிய அரசு ஸ்மித்தை அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்க பரிந்துரை செய்தது.

இந்நிலையில்அணித்தலைவர் ஸ்மித், துணை அணித்தலைவர் வோர்னர் ஆகியோர் அணித்தலைவர் பதவியில் இருந்து விலக ஒப்புக் கொண்டனர்.

இதனால் கிரிக்கெட் வாரியம் அவர்களை உடனடியாக அணித் தலைவர் பதவிகளில் இருந்து நீக்கியது. ஸ்மித்திற்குப் பதிலாக இலக்கு காப்பாளர் டிம் பெய்ன் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# ஷமிக்கு சோதனை





இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான முகமது ஷமிக்கும் அவரது மனைவி ஹசின் ஜஹானுக்கும் இடையே குடும்ப பிரச்சினை இருந்து வருகிறது. ஹசின் ஜஹான் ஷமி மீது பொலிஸில் புகார் அளித்துள்ளார். இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மனைவியுடனான பிரச்சினையில் இருந்து முழுமையாக மீளாத முகமது ஷமி பயிற்சிக்காக உத்தராகாண்ட் மாநிலம் டேராடூனிற்கு சென்றிருந்தார்.

அங்கிருந்து நேற்று டெல்லி திரும்பினார். அப்போது முகமது ஷமி ஓட்டிச் சென்ற கார் டெல்லி அருகே வேனுடன் மோதி விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் ஷமியின் தலையில் காயம் ஏற்பட்டது. காயத்திற்காக நான்கு தையல் போடப்பட்டுள்ளது.

தற்போது இவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தலையில் லேசான காயம் ஏற்பட்டு இருப்பதால் வேறு எந்த பாதிப்பும் இல்லை என்று சிகிச்சை அளித்த வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

# அவுஸ்திரேலிய அணிக்கு தென்னாபிரிக்கா சாட்டையடி



தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் கேப்டவுன் நியூலேண்டில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 311 ஓட்டங்கள் குவித்தது. அந்த அணியின் தொடக்க வீரர் டீன் எல்கர் கடைசி வரை களத்தில் நின்று 141 ஓட்டங்கள் அடித்தார். டி வில்லியர்ஸ் 64 ஓட்டங்கள் சேர்த்தார். அவுஸ்திரேலியா அணி சார்பில் பேட் கம்மின்ஸ் 4 விக்கெட்டும், ஹசில்வுட், நாதன் லயன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களும் வீழ்த்தினார்கள்.



பின்னர் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸை தொடங்கியது. ரபாடா, மோர்கல் ஆகியோரின் சிறப்பான பந்து வீச்சால் 69.5 ஓவர்கள் விளையாடிய அவுஸ்திரேலியா 255 ஓட்டங்களில் சுருண்டது. தொடக்க வீரர் பான்கிராப்ட் 77 ஓட்டமும், நாதன் லயன் 47 ஓட்டமும் எடுத்தார். ரபாடா, மோர்கல் தலா நான்கு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

முதல் இன்னிங்சில் 56 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற தென்னாபிரிக்கா, 2ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. தொடக்க வீரர் மார்கிராம் சிறப்பாக விளையாடி 84 ஓட்டங்கள் சேர்க்க, தென்னாபிரிக்கா 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 238 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டி வில்லியர்ஸ் 51 ஓட்டத்துடனும், டி காக் 29 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 4ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. டி வில்லியர்ஸ் 63 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹசில்வுட் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து டி காக் உடன் பிலாண்டர் ஜோடி சேர்ந்தார். பிலாண்டர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த, மறுமுனையில் டி காக் அரைசதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய டி காக் 65 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ரபாடா 20 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், மகாராஜ் 5ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் பிலாண்டர் அரைச்சதம் அடித்தார். கடைசி விக்கெட்டாக களம் இறங்கிய மோர்கல், 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ஆட்டமிழக்கதென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்சில் 373 ஓட்டங்கள் குவித்து, சகல விக்கெட்டையும் இழந்தது.

பிலாண்டர் 52 ஓட்டங்கள் அடித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். அவுஸ்திரேலியா அணி சார்பில் ஹசில்வுட், கம்மின்ஸ், நாதன்லயன் ஆகியோர்தலா மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து தென்னாபிரிக்கா 429 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. இதனால் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்கு 430 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயித்தது தென்னாபிரிக்கா. 430 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா 2ஆவது இன்னிங்சை தொடங்கியது. கெமரான் பான்கிராப்ட், டேவிட் வார்னர் ஆகியோர் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கினர். இருவரும் சிறிது நேரம் தாக்குபிடித்து விளையாடினர்.



பான்கிராப்ட் 26 ஓட்டங்களிலும், வோர்னர் 32 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். அப்போது அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 59 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அதன்பின் வந்தவர்கள் தென்னாபிரிக்கா அணியினரின் பந்து வீச்சுக்கு தாக்குபிடிக்க முடியாமல் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் அவுஸ்திரேலியா 107 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

மிச்செல் மார்ஷ் 16 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் தென்னாபிரிக்கா அணி 322 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபாரமாக வென்றது. தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில் மார்னே மார்கல் ஐந்து விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

இந்த வெற்றியின் மூலம் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் தென்னாபிரிக்கா அணி 2:1 என முன்னிலை பெற்றது. இரு அணிகளுக்கு இடையேயான நான்காவது போட்டி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

# பான்கிராப்ட் செயல் எனக்கு களங்கம்-சிமித்

கேப்டவுனில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலிய தொடக்க ஆட்டக்காரர் கேமரூன் பான்கிராப்ட் புதுவிதமான சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

களத்தடுப்பு செய்த போது அவர் தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த சிறிய மஞ்சள் நிற பொருளை எடுத்து தனது உள்ளாடைக்குள் போட்ட காட்சி வீடியோவில் தெளிவாக பதிவானது. அதை பயன்படுத்தி அவர் பந்தை சேதப்படுத்தி இருக்கலாம் என்று சந்தேகம் கிளம்பியுள்ளது.

தென்னாபிரிக்க முன்னாள் அணித்தலைவர் கூறுகையில், அந்த பொருள் சொரசொரப்பு காகிதம் போன்று இருக்கிறது. அதில் தேய்த்து பந்தின் தன்மையை அவர் மாற்றி இருப்பார் என்று நினைக்கிறேன். ஆனால் நடுவர் பந்தை உடனடியாக மாற்றாதது எனக்கு ஆச்சரியம் அளித்தது என்றார்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்டீவன் சிமித் கூறுகையில் உணவு இடைவேளையின் போது வீரர்களிடம்இதுபற்றி ஆலோசித்தேன்.

பான்கிராப்ட்டின் செயல் விளையாட்டின் உண்மையான உத்வேகத்துக்கு அழகல்ல. இதற்காக வருந்துகிறேன். இதன் மூலம் தலைவராகிய எனது நேர்மை குறித்தும், அணியின் நேர்மை குறித்தும் கேள்விகள் எழுகிறது. வருங்காலத்தில் இது போன்று மீண்டும் நடக்கக்கூடாது என்றார்.

# தத்தளிக்கிறது இங்கிலாந்து



இங்கிலாந்து மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டியின் இறுதி நாள் ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து அணி நியூஸிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும், 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், கடந்த பெப்ரவரி 25 ஆம் திகதி முதல் விளையாடி வருகின்றது.

இப் போட்டியில் 22 ஆம் திகதி ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில், முதலாவதாக களமிறங்கிய இங்கிலாந்து அணி 58 ஓட்டங்களுடன் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனை தொடர்ந்து களமிறங்கிய நியூஸிலாந்து அணி முதலாம் நாள், 2 ஆம் நாள், 3 ஆம் நாள் மற்றும் 4 ஆம் நாள் ஆட்டத்தில், 141 ஓவர்களில், 8 விக்கெட்டுக்களை இழந்து 427 ஓட்டங்களை பெற்று, ஆட்டத்தை பாதியில் இங்கிலாந்து அணியிடம் 2 ஆவது இனிங்சுக்காக கொடுத்துள்ளது.

இதனடிப்படையில் நேற்று நடைபெற்ற 4 ஆம் நாள் ஆட்டத்தில் 2 ஆவது இனிங்சுக்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி, 46.5 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களை பெற்றது. தொடர்ந்து இன்று இறுதி நாள் போட்டி நடைபெறவுள்ளது.



கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் க.தங்கவேல் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சர் திருமதி.அனந்தி சசிதரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் வடமாகாண முதலமைச்சரின் உருவப் படம் வரைந்து வழங்கப்பட்டது. (படங்கள்: மகாலிங்கம்)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்பில் உண்மை வெளிவரும்

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணையின் தோல்வியிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பல்வேறு விதமான தந்திரோபாய முறைமைகளை கையாண்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றி கொள்வதில் கூட்டு எதிர்க் கட்சியுடன் சரிசமனான போட்டி நிலையொன்று உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பின் போது மத்திய வங்கி பிணைமுறி மோசடிக்கு ஆதரவு வழங்குபவர்கள் யார்? அதற்கு எதிரானவர்கள் யார்? என்பதை தெளி வாக பார்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை மீனவர்கள் பிரான்ஸில் மீட்பு

(கொழும்பு)

பிரான்ஸிற்கு சொந்தமான ரீயூனியன் தீவிற்கு அருகில் விபத்துக்குள்ளான நிலையில் கடலில் மிதந்த 6 இலங்கையர்கள் அந்த நாட்டு கப்பல் ஊடாக காப்பாற்றப்பட்டுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட மீனவர்கள் ஆரோக்கியமான நிலையில் உள்ளார்கள் என மீன்பிடி திணைக்களத்தின் உதவி இயக்குநர் பத்மபிரிய திசேரா தெரிவித்தார்.

மீனவர்கள் ரீயூனியன் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இந்த மீனவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் நீர்கொழும்பு கடலுக்கு சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்தனர் எனவும் தெரிவித்தார். (இ-7)


அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்
நீங்கள் அறிந்த
♦ செய்திகள்
♦ புகைப்படங்கள்
♦ நிகழ்வுகள்
♦ பேசும் படங்கள்
போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.
VIBER செயலி இல
076 636 3378
Viber


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர் திருமதி.

## கணேசலிங்கம் மீனாம்பிகை

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1940 - 12 - 02 | 2016 - 03 - 18 |



ஊரெங்கும் உலாவி வந்த
உயிர்ப்பறவை ஒன்று ஜகத்தில்
தன் குஞ்சுகளிற்கு ஏணியாக
ஏற்றமுடன் இருந்துவிட்டு
திடீரெனத் தன் குஞ்சுகளைத் தவிக்கவிட்டுச்
சென்றதுவோ-கனவு போலும்
நம்பமுடியவில்லை, நாம்படும் வேதனையை
வடிக்க இவ் ஜகத்தில் வார்த்தையில்லை
அனுவனுவாய் நிதம் கலங்கித் துடிக்கின்றோம்
ஒரு தூய அன்பின் சகாப்தம் முடிவடைந்துவிட்டதென
பெறுக சாந்தி பரம் பொருளின் பாதங்களில்.



26.03.2018 அன்று காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(8377)

141/5, கோவில் வீதி, நல்லூர்.
மங்கையற்கரசி பாடசாலை ஒழுங்கை

இங்ஙனம்
கணவர், பிள்ளைகள்,குடும்பத்தவர்கள்

# இராசி பலன்

**26.03.2018**
பங்குனி 12, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு
தசமி பின்னிரவு 3.06 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 12.23 மணிவரை
சுபநேரம் 12.15-1.45 மணிவரை
இராகுகாலம் 7.45-9.15 மணிவரை
இரண்டாம் பங்குனித் திங்கள்
அமிர்தசித்தம்
வளவன்

கிரகநிலை: சூரி, சுக், புத. – சந் – ராகு – கேது – சனி, செவ் – குரு
சந்திராஷ்டமம்: மூலம்

**மேடம்:** தொழில் நலன்கருதி ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மிதுனம்:** எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், அம்பிகை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

**கன்னி:** திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை ஒவ்வொன்றாக செய்து முற்படுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** பூர்விகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், பொறுமையால் முன்னேற்றம் காண வேண்டிய நாள்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள்.

**மகரம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், தொழில் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், இனிமையான நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மீனம்:** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.



நல்லூர் ஸ்ரீ சீரடி சாயி பாபா ஆலய இராமநவமி உற்சவத்தை முன்னிட்டு பாற்குட பவனி நேற்றுக் காலை இடம்பெற்றது. நல்லூர் விஷ்ணு ஆலயத்திலிருந்து காலை 9:30 மணியளவில் ஆரம்பமான பாற்குட பவனி சீரடி சாயி பாபா ஆலயத்தை வந்தடைந்து பாலாபிஷேகம் நடைபெற்று பின்னர் விசேட பூசைகளும் சிறப்பாக நடைபெற்றன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# யாழ். மாவட்டத்தில் 98 வீதமானவர்கள் உரிய நேரத்தில் வரி செலுத்துகின்றனர்

## ஆணையாளர் நாயகம் ஐவன் திசாநாயக்க பாராட்டு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 98 வீதமானவர்கள் உரிய நேரத்தில் வரி செலுத்தி நாட்டின் வளர்ச்சிக்குப் பங்காற்றி வருவதாக சுட்டிக்காட்டிய, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணை யாளர் நாயகம் ஐவன் திசாநாயக்க, வரி செலுத்துநர்களுக்கு உரியவகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊக்கப்படுத்தும் பிராந்திய இறை வரித் திணைக்கள ஆணையாளர் பந்துல ஹப்புத் தந்திரிகேவை வெகுவாகப் பாராட்டினார்.

யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா கே.கே.எஸ் வீதி இல. 71 இல் கடந்த 23 ஆம் திகதி யாழ். பிராந்திய உள்நாட்டு இறை வரித் திணைக்கள ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகே தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஐவன் திசாநாயக்க மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்கள் வரி செலுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். இங்குள்ள 98 வீதமான வரி செலுத்துநர்கள் உரிய நேரத்தில் வரி செலுத்தியதாக விபரத் திரட்டுக்கள் குறித்த தவணைகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது சாதாரணமான விடயமல்ல. இதற்காக யாழ்ப்பாணத்திலுள்ளவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


மிக விரைவில் யாழ். பிராந்திய கிளைக்கு ஒரு புதிய கட்டடம் அமைக்கநடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டடத்தை அமைப்பதற்கான காணி ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் யாழ். பிராந்திய இறைவரித் திணைக்கள ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகேவின் விடா முயற்சியால் இக் கட்டடம் நிரந்தர இடத்தில் அமையப் பெற்றால் வரி செலுத் துநர்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந் நிகழ்வில் உரையாற்றிய பிராந்திய இறைவரித் திணைக்கள ஆணையாளர் பந்துல ஹப்புத்தந்திரிகே, இறைவரித் திணைக்களத்தின் சேவையை இலகுபடுத்தவும் வரி செலுத்துதல் குறித்து வர்த்தகப் பெருமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக்வும் தெரிவித்தார்.

வரிசெலுத்துதல் இன்றியமையாத ஒன்று எனவும் உரிய காலத்திற்குள் வரி செலுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (இ)

## வல்வெட்டித்துறை சுயேட்சைக்குழு உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் சுயேட்சைக் குழுவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வல்வை மக்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

வல்வெட்டித்துறை முத்து மாரி அம்மன் கோபுர வாசலில் சமாதான நீதவான் தண்டபாணிகதேசிகர் குருக்கள் முன்னிலையில் வல்வெட்டித் துறை நகரசபை சுயேட்சைக் குழு உறுப்பினர்களே இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்தனர். இந்த நிகழ்வில் முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா தலைமை வகிக்க ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-7)

## தொண்டராசிரியர்கள் இன்று ஒன்று கூடவும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அனைத்து தொண்டராசிரியர்களும் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னதாக கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபைக்கு முன்பாக நியமனம் தொடர்பான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒன்று கூடுமாறு வட மாகாண தொண்டராசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## பணப்பை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வாடகை கார் தரிப்பிடத்துக்கு அண்மையில் கடந்த 25 ஆம் திகதி ஒரு தொகை பணம் அடங்கிய பை கண்டெடுக்கப்பட்டது. இப் பணப் பையினை தவற விட்டவர்கள், யாழ்ப்பாணம் வாடகைக்கார் சங்கத்தில் தலைவர், வி. ஜெகதீசனை தொடர்பு கொண்டு உரிய ஆதாரங்களை காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## சுமுகமாக உள்ளூராட்சி நிர்வாகத்தை நடத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்-சீ.வீ.கே.

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் சுமுகமான உள்ளூராட்சி நிர்வாகத்தினை நடத்த அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்க வேண்டுமென வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி சபை நிர்வாகம் இன்று ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் கைதடியில் அமைந்துள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி நிர்வாகத்தினை உள்ளூர் விடயம் என்பதனால் அதற்குள் மட்டுப்படுத்திக்கொண்டு சேவைகளை வழங்கக்கூடிய வகையில் அனைத்து தரப்பினர்களும் செயற்படுவதே இன்றைய தேவையாக இருக்கின்றது. வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி நிர்வாகத்தினை சுமுகமான நிலையில் கொண்டு நடத்துவதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

புரிந்துணர்வுகள் இடம் பெற வேண்டும். ஏனைய மாகாணங்களை விட வட மாகாணத்தில் சிறந்த நிர்வாகமாக திகழ வேண்டும். அந்தந்தகட்சிகள் தமது தலைவர்களை தெரிவு செய்வதன் மூலமும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பதன் மூலமாகவும் சுமுகமான சூழலை உருவாக்க வேண்டும். முரண்பட்டுக்கொண்டு உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்க முடியாது.

தனிப்பெரும் பான்மை பெற்ற எந்தக் கட்சியாக இருந்தாலும், முழுமையான ஆதரவினை ஏனையோரும் வழங்கியும் கலந்துபேசியும், சிக்கலில்லாத நிர்வாகத்தினை வடமாகாணத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-4)




உ
சிவமயம்

# கிளி/கரைச்சி புளியம்பொக்கணை
# திருவருள்மிகு நாகதம்பிரான் ஆலய
# ஆண்டுற்சவ பங்குனி உத்தரப்
# பொங்கல் விழா - 2018

விளக்கு: 23.03.2018

பொங்கல் : 30.03.2018




***நாகதம்பிரான் மெய்யடியார்களே!***

சரித்திர பிரசித்தி பெற்ற கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவத்தை முன்னிட்டு பங்குனி மாதம் 9 ஆம் நாள் 23.03.2018 வெள்ளிக்கிழமை விசேட அபிஷேக பூசை நிகழ்வுகள் நடைபெற்று பிரம்பு வழங்கும் வைபவமும் சிறப்பாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 16 ஆம் நாள் 30.03.2018 வெள்ளிக்கிழமை பௌர்ணமி திதியும் உத்தர நட்சத்திரமும் கூடிய பகல் இரவு நிகழ்வாக மிகவும் சிறப்பாக நடைபெறும்.

**பாரம்பரிய முறைப்படி மீசாலை புத்தூர் சந்தி பண்டமரவடியில் இருந்து மடைப்பண்டம் எடுத்து வரப்பட்டு பொங்கல் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெறும்.**

## முக்கிய குறிப்பு

- அனைத்து இடங்களில் இருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- பாதுகாப்பு ஒழுங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
- அர்ச்சனைப் பொருட்கள் வழமைபோல் ஆலயத்தில் விற்பனை செய்யப்படும்
- ஆலய பற்றுச் சீட்டுடன் ஆலயத்தில் இருந்து வருபவர்கள் மட்டுமே திருப்பணி நேர்த்திக் கடன் , நன்கொடைகள் பெறுவதற்கு அனுமதி உள்ளவர்கள், ஏனைய எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை
- எட்டாம் மடை 06.04.2018 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

**அடியார்கள் தொடர்ந்து நடைபெறுகின்ற பூசைகளிலும் வழிபாடுகளிலும் பங்கு கொண்டு உங்கள் நேர்த்திகளைப் பூர்த்தி செய்து எல்லாம் வல்ல நாகதம்பிரான் திருவருளை பெற்றுய்யும் வண்ணம் வேண்டி நிற்கும்**

**தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபையினரும்**

**குறிப்பு: நாகதம்பிரான் ஆலயத்தின் சிவன் வாசலிற்கான இராஜகோபுரம் அடிக்கல் நாட்டு விழா 22.04.2018 அன்று சிறப்பாக நடைபெறவுள்ளது என்பதையும் நாகதம்பிரான் நல்லடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.**

(1987)



ஈவினை மத்தி கற்பக விநாயகர் முன்பள்ளி மழலைகளின் வருடாந்த விளையாட்டு விழா கற்பக விநாயகர் சனசமூகத் தலைவர் அரிகரனினால் நிலைய முன்றலில் அண்மையில் நடைபெற்ற போது...

## இராணுவம் சாராத வேலைகளை செய்வதற்கு யாழ்.மாவட்ட கட்டளை தலைமையகத்தால் தமிழ் இளையோர்கள் ஆட்சேர்ப்பு

இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத வேலைகளை செய்வதற்கு யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தால் தமிழ் இளையோர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர் என்று யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

பலாலியில் தமிழ் ஊடகவியலாளர்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

இராணுவத்தில் உள்ள இராணுவம் சாராத வேலைகளை செய்வதற்கு தமிழ் இளையோர்களை இரண்டாம் கட்டமாக ஆட்சேர்ப்பு செய்கின்றோம். கௌரவமான நிரந்தரமான அரசாங்க தொழிலை செய்கின்ற வாய்ப்பு இதன் மூலமாக தமிழ் இளையோருக்கு கிடைக்க பெறுகின்றது. அடிப்படை சம்பளம் 40 ஆயிரம் ரூபாவில் இருந்து 45 ஆயிரம் ரூபாய் வரையில் வழங்கப்படுகின்றது. உணவு, உடை, வைத்திய வசதி ஆகியனவும் வழங்கப்படுகின்றன. அத்துடன் அரசாங்க வங்கிகளில் கடனுதவிகள் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

மர நடுகை, தென்னை பயிர்ச்செய்கை, மீள் காடு வளர்ப்பு, தோட்ட செய்கை, பண்ணை தொழில் ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட கடமைகளை இவர்கள் செய்ய வேண்டியுள்ளது. 32 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் வேலைக்கு விண்ணப்பிக்க முடியும். இவர்களில் முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றோம். ஏற்கனவே 150 தமிழ் இளையோர்கள் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தில் இராணுவம் சாராத வேலைகளை செய்து வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.(2)

## பண மோசடியில் ஈடுபட்ட நபர் பருத்தித்துறையில் மடக்கிப்பிடிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா நகரப்பகுதியில் நிதி நிறுவனம் நடத்துவதாக தெரிவித்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களிடம் பண மோசடி செய்த நபர் வழக்கு தவணைகளுக்கு ஆஜராகாமல் மறைந்திருந்த நிலையில் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வவுனியா நகர மத்தியின் விவசாய கால்நடை மீன்பிடி ஊக்குவிப்பு நிறுவனம் என்ற பெயரில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களிடம் ஆசை வார்த்தைகளை கடன் வழங்கும் திட்டமொன்றை அறிமுகம் செய்து பல கோடி ரூபா நிதி மோசடி மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது ஏமாற்றப்பட்ட பொது மக்கள் குறித்த அலுவலகத்தில் ஒன்று திரண்டு போராட்டம் நடத்தியதுடன் அங்கிருந்து மக்களை ஏமாற்றிய குழுவை வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இதனையடுத்து இவ்வாறு பணம் கொடுத்து ஏமாற்றமடைந்த சுமார் 200 இற்கும் அதிகமானவர்கள் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு குறித்த ஏமாற்றுப் பேர்வழியை கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து முக்கிய சூத்திரதாரியான ஆனந்தராஜா வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன் நிமிர்த்தம் வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் சரீரப் பிணை வழங்கப்பட்டிருந்த ஆனந்தராஜா கடந்த 3 வழக்குகளுக்கு வவுனியா நீதிமன்றத்திற்கு ஆஜராகாமையினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை பிணையாளர்களுக்கும் பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டதன் பிரகாரம் பருத்தித்துறையில் குறித்த பண மோசடி ஆனந்தராஜா மறைந்திருப்பதாக தெரிய வந்ததையடுத்து பிணையாளர்கள் சிலர் நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு சென்று குறித்த நபரை பிடித்து பருத்தித்துறை பொலிஸாரிடம் கையளித்ததுடன் வவுனியா பொலிஸாருக்கும் தகவல் வழங்கியுள்ளனர்.

பல கோடி ரூபாவை மக்களிடம் ஏமாற்றிய குறித்த நிறுவனத்தின் தலைவரான ஆனந்தராஜா கடந்த காலங்களில் அரசியல் வாதிகளுக்கு தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டிருந்ததுடன் பட்டதாரிகள் சங்கம் ஒன்றையும் உருவாக்கி அரசியல் செயற்பாட்டிலும் ஈடுபட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-60-281)

## 2017 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் தண்டப் பணமாக 16 லட்சத்து 16500 ரூபா அறவிடப்பட்டது

## மதுவரி திணைக்களம் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு தண்டப்பணமாக 16 இலட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபா பெறப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மதுவரி திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எ.அசோக திலகரத்தின தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோத கள்ளு மற்றும் சாராய விற்பனை, கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் உட்பட கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் மீது கடந்த வருடத்தில் மட்டும் 507 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் சுற்றிவளைப்பு சோதனைகளின் போது 2017 ஆம் ஆண்டு மட்டும் 21 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இவற்றின் மூலமே 2017 ஆம் ஆண்டு தண்டப்பணமாக 16 இலட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபா பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.(2-250)

## இரு நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளையின் "சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம், சைவ பூஷண சந்திரிகை நூல்கள் வெளியீடு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், புலோலி மேற்கு, பருத்தித்துறையில் மேற்படி சனசமூக நிலைய செயலாளர் மு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நூலின் வெளியீட்டுரையை பருத்தித்துறை நண்பர்கள் அமைப்பின் இணைப்பாளர் குலசிங்கம் வசீகரன் ஆற்றுவார். சிவஷேத்திராலய மகோற்சவ உண்மை விளக்கம் எனும் நூலிற்கு கருத்துரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் மா. வேதநாதன் ஆற்றுவார்.

சைவ பூஷண சந்திரிகை எனும் நூலின் கருத்துரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் சி.ரமணராஜா நிகழ்த்துவார்.

ஏற்புரையை நூல்களின் பதிப்பாசிரியர் தி.செல்வமனோகரன் ஆற்றுவார். (2)

## தெய்வீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு அருள்மிகு ஞானவைரவப்பெருமான் ஆலயத்தில் பங்குனி உத்தரத்தினையொட்டி வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 30 ஆம் திகதி வரை 12 தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை தெய்வீக ஞானத் தமிழருவி வர்ணனைக் கலாநிதி மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் ஆசிரியரின் தொடர் தெய்வீக அருளுரைகள் இந்து மதம் என்ன சொல்கிறது எனும் தலைப்பில் கீழ் நடைபெற்று வருகின்றன.

நிறைவு தினத்தன்று பங்குபெறும் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவு போட்டி நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (2)



யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற 16 ஆம் அணியினரின் பிரிவுபசார விழா ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர் யுவராஜா ஜெலீபன் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்

# ஆதரவற்று நிற்கும் குழந்தைகளின் துயர்கருதி ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்குங்கள்

## அமைச்சர் றிசாத் ஜனாதிபதிக்கு உருக்கமான வேண்டுகோள்





சிறையில் வாடும் ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி, உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு, அமைச்சர் றிசாத் பதியுதீன் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தாயை பறிகொடுத்த துயரத்திலும், ஏக்கத்திலும் ஆதரவற்றுப்போன ஆனந்த சுதாகரனின் குழந்தைகளின் நலனைக் கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த யுத்த காலத்தின் போது அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் மாத்திரமின்றி அப்பாவித் தமிழர்களும் சிற்சில காரணங்களுக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதேவேளை திட்டமிட்டு தவறு செய்தவர்களும், எதுவுமே அறியாமல் தப்பு செய்தவர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் வாடுகின்றனர்.

யுத்த முடிவுக்குப் பின்னரான சமாதானம் ஏற்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளின் அநேகருக்கு அரசு பொதுமன்னிப்பு வழங்கி, புனர்வாழ்வளித்து விடுதலை செய்தது.

அவர்கள் தற்போது தமது இயல்பு வாழ்க்கையை ஆரம்பித்து, சமூகத்தின் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர்.

அந்தவகையில், கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரும், ஏதோ காரணங்களுக்காக கடந்த பத்து வருடங்களாக சிறையில் வாடுகின்றார்.

அவரது மனைவியும் தற்போது இறந்து விட்ட நிலையில், எதுவும் அறியாத 09 வயதுடைய ஆண் பிள்ளையும், 11 வயதான பெண் பிள்ளையும் தாயும், தந்தையுமின்றி ஆதரவற்ற நிலையில் நிர்க்கதியாகியுள்ளனர்.

எனவே, இந்தக் குழந்தைகளின் துயர் கருதி, அவர்களது தந்தையை விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# பங்குனித் திங்கள் வேள்வி விழா

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டம் குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய பங்குனித் திங்கள் வேள்வி விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி திங்கட்கிழமை பகல் இரவு மறுநாள் அதிகாலை வரை வழமைபோல் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

அபிஷேகம், கொடியேற்றுதல், பூசைகள் என்பனவற்றுடன் பகல் இரவு முழுநாளும் காவடிகள், பாற்செம்பு, கற்பூரச் சட்டி, பறவைக் காவடிகள், தீ மிதிப்பு, பொங்கல் என்பன இடம்பெறும்.

வணிக நிறுவனங்கள் (கடை) அமைப்பதற்கான ஏலம் நாளை செவ்வாய்க் கிழமையும் மறுநாள் புதன் கிழமை ஆகிய இரு நாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அனைத்து இடங்களில் இருந்தும் போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவல் சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)







முல்லைத்தீவு மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 100 மாணவர்களுக்கு காந்தள் புலம்பெயர் இளையோர் அமைப்பின் நிதி அனுசரணையுடன் நேற்றுமுன்தினம் துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார். மேலும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்,புதுகுடியிருப்பு பொலிஸ் அதிகாரி, கிராம சேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்துள்ளனர்.(படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மன்னார்–யாழ்., மன்னார்–தாழ்வுபாடு

## பிரதான வீதிகளில் இரு விபத்துக்கள் படுகாயமடைந்த குடும்பஸ்தர்கள் உயிரிழப்பு



எஸ்.யூலியஸ் (வயது-63)



எம்.சக்திவேல் (வயது- 32)

(மன்னார்)

மன்னார்-யாழ் மற்றும், மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதிகளில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து, வைத்தியசாலைகளில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த இரு குடும்பஸ்தர்கள் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளனர்.

மன்னார்-யாழ். பிரதான வீதியில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் அடம்பன் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தரான முருகாண்டி சக்திவேல் (வயது-32) என்பவரே கடந்த 23ஆம் திகதி உயிரிழந்தவராவார்.

இதே வேளை மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் கடந்த 4 தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செபஸ்தியாம்பிள்ளை யூலியஸ் (வயது-63) என்பவர் சிகிச்சை பலனின்றி கடந்த 23ஆம் திகதி உயிரிழந்தார்.

தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது தாழ்வுபாடு-மன்னார் பிரதான வீதியில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்திற்கு உள்ளாகியுள்ளது.

இதன் போது கணவன் மனைவி மற்றும் பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்து விபத்தை ஏற்படுத்திய நபர் ஆகிய மூவரும் கடும் காயங்களுக்கு உள்ளாகி மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது கடும் காயங்களுக்கு உள்ளான மூன்று பிள்ளைகளின் தந்தையான செபஸ்தியாம்பிள்ளை யூலியஸ் (வயது-63) அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 23 ஆம் திகதி நண்பகல் மன்னார் வைத்தியசாலையில் உயிரிழந்தார். (2-4)

# வீடு செல்வதற்காக காத்திருந்த மாணவி மீது துஷ்பிரயோகம்

## இளைஞன் கைது

(குருமன்காடு)

வவுனியா புதுக்குளத்தில் வீடு செல்வதற்காக பேருந்து நிலையத்தில் காத்திருந்த பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்தியுள்ளதாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து 33 வயதுடைய இளைஞர் ஒருவர் ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தரம் 9 இல் கல்வி கற்கும் 14 வயதுடைய பாடசாலை மாணவியொருவர் நேற்று முன்தினம் மேலதிக வகுப்பிற்காக பாடசாலை சீருடையுடன் நண்பகல் 12 மணியளவில் பாடசாலை முடிவடைந்து வீடு செல்வதற்காக பேருந்து தரிப்பிடத்தில் காத்திருந்துள்ளார்.

இதன் போது, பேருந்து தரிப்பிடத்திற்கு அருகேயுள்ள வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் 33வயதுடைய இளைஞரொருவர் பிரஸ்தாப மாணவியை வர்த்தக நிலையத்திற்கு வருமாறு அழைத்துள்ளார். அந்த மாணவி வர்த்தக நிலையத்திற்கு சென்ற சமயத்தில் பிரஸ்தாப இளைஞன் மாணவியுடன் பாலியல் ரீதியான சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

அவரிடமிருந்து தப்பித்துச் சென்ற மாணவி வீட்டிற்கு சென்று நடந்தவற்றை தாயாரிடம் தெரிவித்த நிலையில்,

தாயார் மாணவியை அழைத்துக்கொண்டு ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று, முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட ஈச்சங்குளம் பொலிஸார் துரிதமாக செயற்பட்டு குறித்த 33வயதுடைய இளைஞனை கைது செய்ததுடன் பாதிக்கப்பட்ட மாணவியை மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த இளைஞனை வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் ஈச்சங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்ட பகுதியில் கடந்த சில வாரங்களில் மட்டும் மூன்று பாடசாலை மாணவிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தப்பட்டுள்ள சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (2-250)

# பயன்தரும் மரங்களை அழிக்கின்ற யானைகளை கட்டுப்படுத்துங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலுள்ள மருதமடுக் கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகளவில் காணப்படுவதாகவும் தினமும் பெருந் தொகையான தென்னை மரங்கள் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளை யானைகள் அழித்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு நாட்களுக்கு முன்னர் காட்டுயானைகளால் அறுபதிற்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பயன்தரக் கூடிய நிலையில் இருந்த தென்னை மரங்கள் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் அவை காட்டு யானைகளாலும் வறட்சியினாலும் அழிவடைந்த நிலையில் மீள்குடியமர்வின் பின்னர் தமது காணிகளுக்குள் நடுகை செய்யப்பட்ட தென்னை மரங்கள் யானைகளால் அழிக்கப்பட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் தொடர்ச்சியாக இரவு வேளைகளில் காட்டுயானைகள் ஊர் மனைகளுக்குள் புகுந்து பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன.

இவ்வாறான தாக்கத்திலிருந்து தமது கிராமங்களைப் பாதுகாக்கும் வகையில் யானைவேலிகளை அமைத்துத்தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

# சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் தெரிவானார்

(பனிக்கன்குளம்)

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவராக தமிழ்மணி அகளங்கன் தெரிவு செய்யப்பட்டார்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவருக்கான தெரிவு நேற்று முன்தினம் காலை சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தின் போதே கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (2-281)

# சனசமூக நிலையங்களைப் பலப்படுத்த இந்திய அரசிடம் உதவிகோரல்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கரணவாய்)

வடமாகாணத்திலுள்ள சனசமூக நிலையங்களை பலப்படுத்தும் விதத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடியுள்ளோம் என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிராமங்களின் முன்னேற்றங்களிலும் விழிப்புணர்வு செயற்பாடுகளிலும் சனசமூக நிலையங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. சனசமூக நிலையங்கள் என்பன வெறுமனே நூல்நிலையங்களை உருவாக்கிப் பராமரிப்பது என்ற தவறான எண்ணம் எம்மிடையே பரவலாகக் காணப்படுகின்றது.

அது தவறு. சனசமூக நிலையங்கள் அந்தந்தப் பகுதிகளில் அல்லது கிராமங்களில் நடைபெறக்கூடிய அல்லது மேற்கொள்ளப்படும் அனைத்து முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கும் அத்திபாரமாகத் திகழ்கின்றன, திகழ வேண்டும்.

ஒரு கிராமத்தில் இயங்கக் கூடிய சனசமூக நிலையம் சிறப்புற இயங்குமாயின் அந்தக் கிராமம் முன்னேற்றகரமான நிலையை அடைவதற்கு வேறு எந்தத் தடையும் காரணிகளாக அமையமாட்டா என்பது பொதுவான கருத்து. இதனால்தான் நாங்கள் வடமாகாண சனசமூக நிலையங்களைப் பலப்படுத்தும் விதத்தில் இந்திய அரசாங்கத்தின் உதவியை நாடியுள்ளோம். இந்திய உயர்ஸ்தானிகர் இது பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றார்.

யாழ்.மாவட்ட வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கரணவாய் வடக்கு, கரணவாய் வடமேற்கு ஆகிய கிராம அலுவலர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய கொற்றாவத்தை கிராமத்தில் அமைந்துள்ள இந்தக் கலைவாணி சனசமூக நிலையம் பல கிளைகளை உள்ளடக்கியதாக உள்ளது. கலைவாணி முன்பள்ளி, றேஞ்சஸ் விளையாட்டுக் கழகம், கலைவாணி மாதர் சங்கம், கலைவாணி இலவசக் கல்வி நிலையம், கலைவாணி கிராம அபிவிருத்திச் சங்கம், கலைவாணி சிக்கன சேமிப்பு கடன் வழங்கல் கூட்டுறவுச் சங்கம், கலைவாணி நாடக மன்றம் எனப் பல கிளைகளைக் கொண்ட ஒரு பரந்து விரிந்த சனசமூக நிலையமாக இச் சனசமூக நிலையம் திகழ்வதுடன் சுமார் 1400ற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட நிலையமாகப் பரிணமித்துள்ளது.

இந்த நிலையத்திற்கான புதிய கட்டட அமைப்புகளுக்காக சுமார் 40 இலட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது.

வேறு எந்தச் சனசமூக நிலையங்களிலும் காணப்படாத ஒரு சிறப்பான நிகழ்வு இந்த நிலையத்தினூடாக முன்னெடுக்கப்படுகின்றமை எனக்கு அறியத்தரப்பட்டது.

அதாவது கொற்றாவத்தை சனசமூக நிலையத்தின் அங்கத்தவர் ஒருவர் தற்செயலாக இறந்து போனார் ஆயின் இறந்த அந்த அங்கத்தவரின் மரண வீட்டு அன்றைய முழுநாள் செலவும் சுமார் ரூ40,000 தொடக்கம் ரூ50,000 வரை இச்சனசமூக நிதியில் இருந்தே செலவழிக்கப்படுவதுடன் மரண வீட்டு ஒழுங்குகள் அனைத்தும் சங்க அங்கத்தவர்களாலேயே மேற்கொள்ளப்படும்.

கிராமிய வாழ்க்கை முறைகளில் காணப்படும் சிறப்பான ஒழுங்குகளில் இதுவும் ஒன்றாகக் கொள்ளப்படலாம். மரண வீட்டில் துயருற்றிருக்கும் குடும்ப அங்கத்தவர்களுக்கு எந்த வேலையும் இருக்க வைக்காது அனைத்து வேலைகளையும் இளைஞர்களே முன்னின்று நடத்தி முடிப்பதுடன் 31ஆம் நாள் வரை உணவுகளும் பல வீடுகளில் இருந்து தொடர்ச்சியாக வழங்கப்படும்.

நகரப்புறங்களில் இவ்வாறான நிகழ்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. ஒருவரின் துன்பத்தில் அனைவரும் இணைந்துகொண்டு தோள் கொடுத்து உதவுகின்ற நிகழ்வுகள் கிராமப் புறங்களிலேயே பாரம்பரியமாகக் கூடுதலாகக் காணப்படுகின்றன. கிராம மக்களின் பிணைப்பையும் ஒருவர்க்கொருவர் உதவி செய்யும் அந்தப் பண்பாட்டையும் வெளிக் கொண்டு வருகின்றன இவ்வாறான செயல்கள்.

கொற்றாவத்தை சனசமூக நிலையத்தின் அங்கத்தவர் ஒருவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட போது அவருக்கு உடனடியாக இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டி இருந்தது. அதற்கு சுமார் 8 இலட்சம் ரூபா வரை நிதி உடனடியாகத் தேவைப்பட்டது.

அந்த அங்கத்தவரிடம் அவ்வளவு பணம் இருக்கவில்லை. அந் நிலையில் சனசமூக நிலையத்தின் இளைஞர் குழாம் (Viber Group) மூலம் செய்திப் பரிமாற்றங்கள் பல நாடுகளுக்கும் பறந்து சென்றன. ஒரே நாளில் 7 1/2 இலட்சம் ரூபா நிதி திரட்டப்பட்டு அந்த அங்கத்தவரின் கைகளில் கொடுக்கப்பட்டதாக அறிந்து மிகுந்த ஆனந்தம் அடைந்தேன்.

தற்கால சூழ்நிலையில் வயோதிபர்களின் அந்திம காலத்தைக் கொண்டு செல்வது மிகவும் சிரமமான காரியமாகப் பல இடங்களில் உணரப்படுகின்றது. பிள்ளைகள் நல்ல நிலைகளில் இருக்கின்ற போது கூட அவர்களின் வயோதிபத் தாய் தந்தையரோடு அவர்கள் நேரத்தை செலவழிக்க இயலாத நிலையில் சிரமப்படுகின்றார்கள்.

தற்கால சூழ்நிலையில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச்செல்ல வேண்டிய கட்டாய நிலை இன்று காணப்படுகின்றது. முன்பெல்லாம் ஒருவர் உழைப்பிலேயே ஒரு குடும்பம் தங்கியிருந்தது. அவரின் வருவாயில் சேமித்த பணத்திலிருந்து வீடு, வாசல், தோட்டம், துரவுஎனப் பொருட்தேடல்களும் இடம்பெற்றன.

ஆனால் எமது வாழ்க்கை முறையில் அகலக்கால் வைக்கப்போய் கணவன், மனைவி, வளர்ந்தவர்கள் என் அனைவரும் வேலைக்குச் சென்றால் மட்டுமே தற்காலத்தில் அந்தக் குடும்பத்தை ஓரளவுக்குச் சிறப்பாகக் கொண்டு செல்ல முடியும் என்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டோம்.

இந்த நிலையில் வயோதிபர்களின் பராமரிப்பு என்பது இயல்பாகவே பிள்ளைகளின் மனதில் ஒரு வெறுப்புணர்வைத் தூண்டுகின்றது. அதே நேரம் 60-70 ஆண்டுகள் தொடர்ச்சியாக உழைத்துப் பிள்ளைகளை உயர்நிலைக்கு கொண்டு வந்த வயோதிபர்கள் இன்று பிள்ளைகளின் சினத்திற்கு ஆளாகின்ற போது மிகவும் துன்பப்படுகின்றார்கள். பிள்ளைகளை எதிர்த்து அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேச முடிவதில்லை.

எதிலும் வயோதிபரைக் குறை காண்கின்ற ஒரு தப்பான கலாசாரம் வளர்ந்து வருகின்றது. எனவே இந்த முதியவர்கள் இறுதிக்காலத்தை மன அமைதியுடனும் நிம்மதியாகவும் கழிக்க ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதற்கு சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும். ஒவ்வொரு சனசமூக நிலையங்களுக்குக் கீழும் வயோதிப நிலையங்கள் உருவாக்கப்பட்டு அந்த நிலையங்களில் வயோதிபர்களுக்கேற்ற சிறு சிறு கைப்பணி வேலைகள், கலை அம்சங்கள் நிரம்பிய பொழுதுபோக்குகள், கருத்துப் பரிமாற்றம் என வயோதிபர்களை ஒன்றாகச் சேர்க்கும் ஒரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும்.

காலையில் வீட்டிலிருந்து வந்து வயோதிப நிலையங்களில் தம்மைப் போன்றவர்களுடன் காலத்தைக் கழித்து பின்னேரம் வீடு செல்ல நடவடிக்கைகள் எடுக்கலாம். அவர்கள் நாள் முழுவதும் மகிழ்ச்சியாக கழிக்கக் கூடிய வகையிலான திட்டங்களை உருவாக்குவதன் மூலம் வயோதிபர்கள் மகிழ்ச்சியாகத் தமது நாட் பொழுதைக் கழிப்பதற்கு வழிவகுக்கலாம். பிள்ளைகளும் வயோதிபத் தாய், தந்தையர்கள் உடல் வலுக்குன்றிய காலத்தில் சிரமப்படுகின்றார்களே என்று கவலைப்படாமல் தமது கடமைகளில் நிம்மதியாக ஈடுபட முடியும். இரவுப் பொழுது மட்டும் அனைவரும் ஒன்றாக இருக்கும் போது குடும்பத்தில் குதூகலிப்பு ஏற்படும். சிரமங்கள், மனக்கசப்புக்கள் குறைவன.

எனவே அன்பார்ந்தவர்களே! உங்கள் சனசமூக நிலையம் பரந்து பட்ட கிளைகளுடன் சிறப்பாக ஏனைய சனசமூக நிலையங்களுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கும் சனசமூக நிலையமாகக் காணப்படுவதால் இந்த நிலையச் செயற்பாடுகளுடன் சேர்த்து வயோதிபர்களுக்கான பொழுது போக்கு மையம் ஒன்றையும் அமைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)






யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் "பெண்களை வலுவூட்டுவோம்" என்ற தொனிப் பொருளில் மகளிர் தின விழா நேற்று முன்தினம் யாழ். நல்லூர் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில், மதத் தலைவர்கள், பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கல்வியியற்றுறை தலைவர், கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய இணைப்பாளர் திருமதி தன லட்சுமி வில்வநாதன், யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை சட்டவிரிவுரையாளர், சட்டத்தரணி திருமதி கோசலை மதன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சோபிகா)

# இலங்கை வரலாற்றில் அதிகூடிய மின் பாவனை

(கொழும்பு)

இலங்கை வரலாற்றில் அதிகூடிய மின்சாரப் பாவனை கடந்த 20ஆம் திகதி பதிவாகியுள்ளதாக மின்சக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.



றம்புக்கனை அரச வைத்தியசாலைக்கு சூரிய ஒளி மின்சாரத் தகடுகள் பொருத்தும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் அஜித் பெரேரா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த 20ஆம் திகதி இலங்கையில் சுமார் 2500 மெகாவோட் மின்சாரம் ஒரே இரவில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இலங்கையில் மின்சாரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அதிகூடிய மின்சாரப் பாவனை அன்றைக்குத்தான் பதிவாகியுள்ளது.

அதற்கான காரணம் தற்போதைக்கு நிலவும் வெப்ப காலநிலையாகும். இலங்கை மின்சார சபை வீடுகளுக்கு வழங்கும் மின்சாரத்துக்கு ஒரு அலகுக்கு 4 ரூபா வீதம் அறவிடுகின்றது.

ஆனால் வீடுகளில் உற்பத்தி செய்யப்படும் சூரிய ஒளி மின்சாரத்தை ஒரு அலகு 22 ரூபா வீதம் கொள்வனவு செய்கின்றோம்.

இதன் மூலம் நுகர்வோர் பெரும் இலாபத்தைப் பெற வழியேற்பட்டுள்ளது என்றும் பிரதியமைச்சர் அஜித் பெரேரா தொடர்ந்தும் தெரிவித்தார். (இ-7)

# வடக்கில் தகுதியான சித்த மருத்துவர்களை நியமனம் செய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாண சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் காணப்படும் சித்தமருத்துவர்களுக்கான வெற்றிடங்களுக்கு வடக்கில் உள்ள தகுதியான சித்தமருத்துவர்களை நியமனம் செய்யுமாறு பாதிக்கப்பட்ட சித்த மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சித்த ஆயுள்வேத வைத்தியசாலைகளில் தற்போது 38 சித்தமருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

வடமாகாணத்தை சேர்ந்த மேற்படி வெற்றிடத்துக்கு தகுதியான பல்கலைக்கழக பட்டப்படிப்பை (BSMS) நிறைவு செய்து இலங்கை ஆயுள்வேத மருத்துவ சபையில் பதிவைப்பெற்ற 30 சித்த வைத்தியர்கள் உள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நியமனம் வழங்கப்பட்ட போதிலும் தற்போது அவ்வாறான நியமனம் வழங்கப்படாமல் உள்ள நிலையில், அதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களும் அசமந்த போக்குடன் இழுத்தடிப்பு செய்து வருகின்றனர்.

எனினும் மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியான 30 சித்தவைத்தியர்களுக்குப் பதிலாக வேறு மாகாணங்களில் உள்ள மருத்துவர்களை கொண்டு நிரப்புவதற்காக முயற்சிகள் நடைபெறுவதை அறியக்கூடியதாக உள்ளது.

எனவே இதற்குப் பொறுப்புக்கூறகடமைப்பட்டவர்கள் இதனை கருத்தில் கொண்டு காலந்தாழ்த்தாது தகுதியான சித்தவைத்தியர்களுக்கு நியமனம் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

# மாணவர் ஒழுக்கத்தில் பாடசாலையின் பங்கு

சமூக நிறுவனங்களில் பிரதானமான ஒரு நிறுவனமாகக் காணப்படுவது பாடசாலையாகும் எதிர்காலத்தில் சிறந்த நற்பிரஜைகளை உரு வாக்கும் பாரிய பணி பாடசாலைகளின் பணி எனக் கூறின் இது மிகையாகாது. பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளுடன் வையத் துள் வாழ் வாங்கு வாழ்வதற்கு வேண்டிய சிறந்த பழக்கவழக்கங்கள், நற்பண்புகள், நற்சிந்தனைகள், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை இணைத்து கற்றல்,கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய தேவை பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. மாணவர் சமுதாயத் தின் ஒழுக்கம் தொடர்பாக கூடிய கவனம் எடுப்பது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

பலபாடசாலைகளில் வேண்டத்தகாத, விரும்பத்தகாத செயற்பாடுகள் இடம்பெறுவதை ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. போதைவஸ்துப் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் நவீன தொழில்நுட்ப இலத்திரனியல் உபகரணங்கள் மூலமான வேண்டத் தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் இன்றைய சமுதாயம் கல்வி யில் அக்கறை குறைந்து உடல் உளத் தூய்மையின்றி வேண்டத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்றார் ஔவைப்பிராட்டி உலகில் உள்ள பிறப்புகளில் மானிடப்பிறப்பே சிறந்தது. எது நல்லது, எது கெட்டது எனச் சிந்தித்து பகுத்தறியக்கூடியது மானிடப்பிறவி. இத்தகைய அரிய பிறப்பெடுத்தவர்கள் நல்லொழுக்கத் துடன் கூடிய வாழ்க்கை வாழவேண்டும்.

ஒழுக்கம் எனக் கூறும்போது பொதுவாகத் தனிநபர் சமூக வாழ்க்கை என்பவற்றைப் போசிக்கின்ற வளப்படுத்துகின்ற மனித குணப் பண்புகளாகும். இவற்றுக்கு உதாரணமாக நேர முகா மைத்துவம் பேணல், நேர்மை,தூய்மை, உண்மை பேசுதல் போன்ற பல விடயங்களைக் கூறிக் கொள்ளலாம். உண்மை, நேர்மை, அன்பு இந்த மூன்றும் ஒருவரிடம் இருக்குமானால் அவரை தடுத்து நிறுத்தும் சக்தி உலகில் வேறு எவருக்கும் கிடையாது என்றார் சுவாமி விவேகானந்தர். மாணவர்களை சமூகமயமாக்கல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் பிரதான நிறுவனமாக பாடசாலை உள்ளது. ஒருமனிதன் தான் வாழும் சமூக சூழமைவிற்கு ஏற்ப இசைவாக்கம் அடைவதை சமூகமயமாக்கல் என்கின்றோம். அதாவது சமூக நியமங்கள், விழுமியங்கள், நடைமுறைகள் என்பவற்றுடன் ஒத்து ஒழுகுவதாகும். மாணவர்கள் கூடிய நேரத்தை பாடசாலையிலேயே கழிக்கின்றனர். இதனால் ஆசிரியர்கள் ஒழுக்கத்துடன் கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டிய தேவையுள்ளது. அத்துடன் மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் களைய வேண்டிய தேவை பாடசாலைச் சமூகத்தை சாருகின்றது. பாடசாலையில் ஏதாவது தவறுகள் நடைபெறுகின்ற போது அதற்கான பொறுப்பு அதிபர், ஆசிரியர்களையே சென்றடைகின்றது. பெற்றோர் அதிபர், ஆசிரியர்களை நம்பியே பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர்.

பாடசாலைச் சமூகம் எனக் குறிப்பிடுகையில் முதலில் மாணவர்களின் ஒழுக்க விழுமியம் பேணுகையில் அதிபரின் பங்கும் பணியும் பற்றி நோக்குபோம்.

➢ அதிபர் ஆளுமைமிக்க தலைவராய் இருத்தல் வேண்டும்

ஆளுமைப் பண்பு எனும் போது அவரது தலைமைத்துவப் பண்பு தொடக்கம் ஒழுக்கம், தொடர்பாடல் திறன் வரை உள்ளடங்குகின்றது. இவ்வாறான பண்புகள் நிரம்பப் பெற்றவராய் இருக்கும் போதுதான் அனைத்து ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி அவர்களுக்கான சரியான அறிவுறுத்தல்களை வழங்கி கற்றல், கற் பித்தல் செயற்பாடுகளிலும் ஒழுக்க நடைமுறை களிலும் முன்னேற்றம் காணமுடியும். நல்ல விடயங்கள் இடம் பெறும் போது தட்டிக் கொடுப்பவராகவும், ஆசிரியர்கள், மாணவர்களை பாராட்டுபவராகவும் இருத்தல் வேண்டும். அதிபர் தன்னை தமது நடத்தையால் தலைவராக்கிக் கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்கு மேற்பட்ட பிரச்சினைகளை கண்டிப்புடன் கூடிய திருத்தங்களையும் மாற்றங்களையும் மேற்கொள்ளக் கூடிய வராய் இருத்தல் வேண்டும். அதிபரின் தலைமைத்துவப் பண்பு என்னும் போது ஆசிரியர்களை கண்காணித்து கணிக்கக் கூடியதிறன், மாணவர்களின் ஒழுக்கத்தை நிலைநாட்டும்திறன் என்பனவும் அவற்றில் இடங்கும்.

➢ பாடசாலைச் செயற்பாடுகளில் எழும் விமர்சனங்களுக்கு பரிகாரம் காணுதல்

ஒரு சிறந்த அதிபரானவர் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவிகள், சமூக ஆர்வலர்கள் அனைவரினும் கருத்துக்களையும் உள்வாங்கி தீர்மானம் எடுக்கக் கூடியவராய் இருத்தல் வேண்டும். அவ்வாறு இரு க்கும் பட்சத்தில் தான் தனது பாடசாலை மாணவர்கள் எவ்வாறு சமூகத்திலே நடந்து கொள்கிறார்கள் என்பது பற்றி அறியலாம். மாணவர்களின் இலைமறைகாயாக இருக்கும் செயற்பாடுகள் வெளியே தெரியவரும். அதிபர் தன்னலம் கருதாது பாடசாலை நலனை முன்னிலைப்படுத்தி குறைகள், குற்றங்கள் மாணவர்களிடத்தில் இருக்கும் போது அவற்றை உடனேயே கண்டு தீர்வுகள் காணக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

➢ அதிபர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் போன்றவர்களுக்கு முன் மாதிரியாய் இருத்தல் வேண்டும்.

உதாரணமாக நேரமுகாமைத்துவத்தை பேணுதல். அத்துடன் வளங்களை வினைத் திறனாக பயன்படுத்துவதைக் குறிப்பிடலாம். ஆசிரியர்களைக் காலைப் பிரார்த்தனையில் ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களை முன்வைக்குமாறு கூறலாம். ஒழுக்கத்தில் சிறந்து விளங்கும் மாணவனை இனங்கண்டு அவனது செயற்பாடுகளை ஏனைய மாணவர்கள் முன் பாராட்டலாம். விசேட தினங்களின் போது தனது கருத்துக்களை முன்வைக்கும் போது அவற்றுடன் இணைத்து ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களை முன்வைக்கலாம்.

➢ அடுத்து மாணவர் ஒழுக்கத்தில் ஆசிரியர்களின் பங்கும் பணிகள் என்பவற்றை நோக்குவோம்

குறிப்பாக வகுப்பாசிரியர்கள் தமது மாணவர்களின் செயற்பாடுகள், கற்றல் நடவடிக்கைகள் நடத்தைக் கோலங்கள் பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் போதுதான் மாணவர்களின் பலம், பலவீனம் தெரியவேண்டிவரும். சில மாணவர்கள் கல்வியில் நல்ல நிலையில் இருந்தாலும் அவர்களின் குணப் பண்புகள் கீழ்நிலையில் இருக்கலாம். ஏனைய மாணவர்கள் மீது எரிச்சல், பொறாமை, பொய், திருடுதல் வன்முறைகளை பிரயோகித்தல் போன்ற செயற்பாடுகள் காணப்படலாம். இவற்றை ஆரம்பத்திலேயே களைவதன் மூலம் மாணவர்களிடையே ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் பண்பு, உண்மை பேசுதல், நேர்மை சகோதரத்துவம் போன்ற பண்புகளை வளர்க்கலாம். இதனூடாக மாணவரிடையே ஒழுக்கப் பண்புகளை மேம்படுத்தலாம்.

➢ ஆசிரியர்கள் மாணவர்களுடன் கதைக்கும் போது ஒழுக்கத்தை ஒருவன் பேணுவதால் கிடைக்கும் நன்மைகள் பற்றி எடுத்துக் கூற வேண்டும். நல்லொழுக்கத் தீர்மானம், கலாசாரமயமாதல், வாழ்க்கைக்கு வழிகாட்டல், சமூக ஒருமைப்பாடு ஏற்படும் என்பது பற்றி சிறப்பித்துக் கூற வேண்டும். சிறுவர்களின் நல்லொழுக்க வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பின்பே நல்லொழுக்கம் என்பது நடத்தை விதிமுறையாகும் என்றார். இவ் விதிகளை வளர்க்க ஆசிரியர்கள் முற்பட வேண்டும்

➢ பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான விழுமியங்கள்

பிள்ளைகளின் உடல் உளசமூக நல்லொழுக்க வளர்ச்சிக்கு தேவையான விழுமியக் கற்றல் அனுவபங்களை பெற்றுக் கொடுப்பதன் ஊடாக சிறந்த பிரஜையாவதற்கு உதவ முடியும். இதனூடாக மானுடப் பாதுகாப்பிற்கு சமாதானமாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கு பொருத்தமான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். அத்துடன் வகுப்பில் நிகழ்கால நடத்தைகளில் காணப்படும் பலவீனங்களுக்கு பரிகாரமான பொருத்தமான ஒழுக்க விழுமியங்களை முன்வைக்கவேண்டும். உதாரணமாக மோதல் எனின் அதனை தடுக்கக் கூடிய பண்புகளான நன்னோக்கம், ஏனையோரை மதித்தல்,இன்சொல் பேசுதல், ஆதரவு வழங்கல், பொறுமை, சகிப்புத்தன்மை போன்ற சிந்தனைகளை மாணவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். இவற்றை நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இணைக் கலைத்திட்டம், மறைக்கலைத்திட்டம் என்வற்றின் ஊடாகமுன்வைக்கலாம்.

➢ காலைப்பிரார்த்தனையின் போது ஒழுக்கம் சார்ந்த கதைகள், கருத்துக்களை முன்வைத்தல். காலைப்பிரார்த்தனை ஒன்று கூடலானது மாணவர்களுக்கு மனம் சலனமற்று இருக்கும் ஒரு அமைதிப் பொழுதாகும். இவ்வேளையில் ஒழுக்கத்தில் சிறந்து விளங்கிய பெரியார்களின் வரலாறுகள் , ஒழுக்கத்தை கடைப்பிடித்த லால் வாழ்வில் முன்னேறியவர்களின் கதைகள், வாழ்வில் சிறந்து விளங்கியவர்களின் நற்சிந்தனைகள் போன்றவற்றை முன்வைக்கலாம். இவற்றுடன் சமயம் சார்ந்த கருத்துக்களை முன்வைப்பதும் ஒரு சிறந்த வழியாகும்.

ஒரு ஆசிரியரானவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைப் பொறுப்புக்களை வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும், உயரிய அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் பக்கச் சார்பின்றியும் நிறைவேற்றும்போது தனது குறிக்கோளை அடைந்து கொண்டும் அதேவேளை மாணவர்களை கல்வி,ஒழுக்கம் என்பவற்றில் மிளிரச்செய்வதுடன் அவர்களை நற்பிரஜைகளாக்க முடியும் என்பதில் ஐயமில்லை.

நீங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பணியை செய்யப் பிறந்தவர்கள் என்றார் சுவாமி விவேகானந்தர். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இக்கூற்றை மனதில்நிறுத்திச் செயற்படும் பொழுது எதிர்கால சிறந்த சிற்பிகளை உரு வாக்கும் அதே வேளை சிறந்த ஒரு சமு தாயத்தையும் படைக்கமுடியும் என்பது திண்ணம். ஒரு நாணயத்தின் இரு பக்கம்போல் காணப்படும் கல்வியையும், ஒழுக்கத்தையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

**திருமதி ராதிகா துஸ்யந்தன்.**
**கல்வியங்காடு.**


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு:
021 221 7603,
021 567 1532

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடை வளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு.

தொ.பே:0771681697, 0766205322

## ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு விலைக்கழிவு!!!

**சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் ஆயுர்வேத தயாரிப்புகளிற்கு எம்மிடமிருந்து விசேட விலைக் கழிவுகளைப் பெற்றிடுங்கள்.**

**அரிஷ்டம்**

தசமூலம்- தேக இளைப்பு, தாது விருத்தியின்மை, பலவீனத்திற்கு
அபயா - மூலத்திற்கும் மலச் சிக்கலுக்கும்
கனகாசவ- இருமல், இழுப்பு வியாதிக்கு
அசோகா - வெள்ளை படுதல், மாதவிடாய்க் கோளாறு, அதிக உதிரப் போக்கிற்கு
கதிரா - கடி, சொறி, தோல் வியாதிக்கு

**தைலம்**

பிண்ட தைலம்- வாதம், சொறி, காலில் உள்ள வெடிப்பிற்கு
மகா நாராயணத் தைலம் - வாதம், பாரிசவாதத்திற்கு
மகா சித்தார்த்த தைலம் - நெஞ்சு வலி, மூட்டு வலி, மூட்டு வீக்கத்திற்கு
Kadahapola மூலரோக சுவய- மூலரோகத்தினால் ஏற்படும் இரத்தப்போக்கு கட்டிகள் தோன்றுதல், மூலம் வெளித்தள்ளுதல், சீதம் போதல், வயிறு உப்பி கடுமையாகுதல், சிறுநீர் மஞ்சளாதல், எரிச்சல், வேதனை போன்றவற்றிற்கு வியத்தகு குணம் தரும் ஔடதமாகும்.

**சூரணம்**

தாளிசாதி- சளி, இருமலிற்கு
அஷ்வகந்தா- பசியின்மை, இழந்த சக்தி மீட்சி, வீரியத்திற்கு

இதுபோன்ற பல நோய்களிற்கான அரிஷ்டம், ஆசவம், தைலம், சூரணங்கள், கூந்தல் எண்ணெய்களை எம்மிடம் சில்லறையாகவும் மொத்தமாகவும் வாங்கும் போது விசேட விலைக் கழிவுகளை இன்று முதல் பெற்றிடுங்கள்.

குறிப்பு: சில்லறையாக வாங்குபவர்கள் மருந்துச் சிட்டையுடன் வரவும்.

தொடர்பு: சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.(சந்திரச் சந்திக்கு அருகில்)
தொ.இல: 021 222 2567

## நம்பிக்கை இழக்க வேண்டாம்.

**உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.**

எந்தத் துயரமாயினும், அழையுங்கள். அல்லது நேரில் வாருங்கள்.

மதசார்பற்ற, இலவச சேவை. ரகசியமானது.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

யாழ்ப்பாணம்: 077 900 8776
(தினமும் மு.ப. 9.00 - பி.ப. 1.00)
வவுனியா: 024 324 4444
(சனி, ஞாயிறு மு.ப. 9.00 - பி.ப. 1.00)


உ
சிவமயம்

## ஈழத்துச் சிதம்பர புராணம்

ஈழத்துச் சிதம்பர அநாதி முறைமையான பழைமை
ஈழத்து சிதம்பர மஹோற்சவ காலத்தில் பாராயணம்

பொய்யிலா வன்பு பொங்கிடப் புரைதீர்
பண்ணிசை யாற் புகழ் பாடிப்
பையரா வேணிப் பண்ணல திண்ணைப்
பரவிய பாணபத் திரரின்
வெய்யதாம் வறுமை விடிவுறச் சேரற்
கொரு தமிழ் விளம்பிய புலவா
செய்யதீர்த் திண்ண புரத்தம ரழுகுச்
செல்வனே வாழ்வெமக் கருளே

பொருள்: நச்சுப் பையினையுடைய பாம்பினையணிந்த சடைமுடியையுடைய கடவுளே! பொய்மையில்லாத பேரன்பு பெருக குற்றமற்ற பண்ணிசையினாலே தேவரீரது புகழினைப் பாடி, உம்மை வழிபட்ட பாணபத்திரனின் கொடிதாகிய வறுமை தணிய சேர மன்னனுக்கு(சேரமான் பெருமாள் நாயனார்) ஒப்பற்ற தமிழ் பாசுரம் ஒன்றை எழுதிக் கொடுத்த புலவனே (சிவனே) செவ்விய சிறப்பனைத்தும் பொருந்திய திண்ணபுரத்தில் எழுந்தருளிய சுந்தரேசப் பெருமானே அடியேங்களுக்கு மேலான சிவ வாழ்வினை அருளுதல் வேண்டும்.

நவாலியூர் புலவர் மணி சோ.இளமுருகனார்

பங்குனித் திங்கள் மகா உற்சவ காலங்களில் மடாலயத்தில் சிவத்திரு வே. சுப்பிரமணியம் அவர்கள் சாயந்திரம் புராணப்படிப்பு நிகழ மாணிக்க வாசகர் அருள் காரைநகர் மக்களின் குலதெய்வம் ஈழத்துச் சிதம்பரம் கூத்தபிரான் உணர்வு நிலைக்கு வழிபட்டு தினந்தோறும் உள உறுதி பெறுவோம்.

அன்பே சிவம்

மாணிக்கவாசகர் மடாலயம்
போசகர்: க.கு.க.சிவபாலன்

# பாரதம்

# கால்நடை தீவனத்தில் ஊழல் மோசடி லாலு பிரசாத்திற்கு 14 ஆண்டுகள் சிறை



(ராஞ்சி)

கால்நடை தீவன ஊழல் தொடர்பாக லாலு பிரசாத் யாதவ் மீது தொடரப்பட்ட 4 ஆவது வழக்கில் 14 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூபாய் 60 இலட்சம் அபராதமும் விதித்து சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பீகார் மாநிலத்தை உலுக்கிய கால்நடை தீவன ஊழல் தொடர்பாக முன்னாள் முதலமைச்சர்களான லாலு பிரசாத் யாதவ், ஜெகநாத் மிஸ்ரா மற்றும் பலர் மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள் அனைத்தும் ஜார்கண்ட் தலைநகர் ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வரும் நிலையில் 3 வழக்குகளில் ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 4 ஆவது வழக்கின் விசாரணை அண்மையில் நிறைவடைந்தது. 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பீகாரின் தும்கா கருவூலத்தில் இருந்து முறைகேடாக ரூபாய் 3.13 கோடி பெற்றது தொடர்பாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு இருந்தது.

இதில் லாலு பிரசாத் யாதவ், ஜெகநாத் மிஸ்ரா உட்பட 31 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டு இருந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி சிவபால் சிங், லாலு பிரசாத் உட்பட 19 பேர் குற்றவாளிகள் என கடந்த 19 ஆம் திகதி தீர்ப்பு அளித்தார். ஜெகநாத் மிஸ்ரா உட்பட 12 பேர் இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்ட 19 பேரின் தண்டனைக்கான வாதங்கள் கடந்த 3 நாட்களாக நடந்தது. இவை நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் தண்டனை விபரம் அறிவிக்கப்பட்டது.

இதில் லாலு பிரசாத் யாதவுக்கு இந்திய தண்டனை சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தலா 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டார். இந்த தண்டனையை ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். லாலு பிரசாத் யாதவ் தொடர்ந்து 14 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் இரண்டு சட்டப்பிரிவுகளின் கீழும் தலா ரூபாய் 30 இலட்சம் என மொத்தம் ரூபாய் 60 இலட்சம் அபராதமும் லாலுவுக்கு விதிக்கப்பட்டது. இதை செலுத்த தவறினால் கூடுதலாக 2 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

இதைப்போல இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திவாகருக்கும் 14 ஆண்டு சிறையும் ரூபாய் 60 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. மீதமுள்ளவர்களுக்கு 3 1/2 ஆண்டுகள் முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது.

ராஷ்ட்ரீய ஜனதாதள தலைவரான லாலு பிரசாத் யாதவுக்கு 4 ஆவது கால்நடை தீவன ஊழல் வழக்கில் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு இருப்பது, கட்சியினரிடையே பெரும் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்படும் என லாலு பிரசாத் யாதவின் சட்டத்தரணி பிரபாத் குமார் தெரிவித்தார்.

ஏற்கனவே தீர்ப்பு வழங்கப்பட்ட 3 வழக்குகளில் லாலு பிரசாத் யாதவுக்கு மொத்தம் 13 1/2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு உள்ளது.

இதனால் அவர் கடந்த ஆண்டு டிசெம்பர் 23 ஆம் திகதியிலிருந்து முதலே ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சிறையில் அவருக்கு கடந்த வாரம் நெஞ்சுவலி ஏற்பட்டதால் ராஞ்சியில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் 'வீடியோ கான்பரன்சிங்' முறையிலேயே 4 ஆவது வழக்கின் தண்டனை விபரத்தை நீதிபதி அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (10)

# அமைச்சர்கள் பதவியை துறந்து எதிர்ப்பைக் காட்டவேண்டும்

## சரத்குமார் வேண்டுகோள்



(சென்னை)

காவிரி மேலாண்மை அமைக்கும் விடயத்துக்கு தமிழக அமைச்சர்கள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்து மத்திய அரசுக்கு அழுத்தத்தை கொடுக்க வேண்டுமென, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் காவிரி உரிமை மீட்பு விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

காவிரி மேலாண்மை அமைப்பது தொடர்பில் விவாதிப்பதற்கு மத்திய அரசினால் அமைக்கப்பட்டுள்ள 9 பேர் கொண்ட குழு வீணான காலதாமதத்தையே ஏற்படுத்தும்.

அத்துடன் ஏனைய நாடுகளில் நதிகளை பங்கீடு செய்வதில் எந்தவொரு சிக்கலும் ஏற்படாமல் மிகவும் சாதாரணமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

ஆனால் தமிழகம் மற்றும் கர்நாடகா இவ்விடயத்தில் ஒன்றுபடாமல் செயற்படுவதற்கு காரணம் என்னவென்று புரியவில்லை. காவிரி தொடர்பில் தமிழகம் பல வருடங்களாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றது.

இந்நிலையில், காவிரி மேலாண்மை அமைப்பது தொடர்பில் உச்சநீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பையும் மத்திய அரசு மதிக்காமல் செயற்படுகின்றமையானது வருத்தத்துக்குரிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

# இந்தியாவிலிருந்து நக்சலைட்டுக்... இறுதிக் காலம் நெருங்கிவிட்டது -



(டில்லி)

இந்தியாவில் நக்சலைட்டுகளின் இறுதிக்காலம் நெருங்கிவிட்டது என மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் சிஆர்பிஎஃப்பின் 79ஆவது எழுச்சி தினத்தை முன்னிட்டு நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ராஜ்நாத் சிங் பேசும் போது,

நாட்டில் நக்சலைட்களுக்கு இது கடுமையான சவால் அது தற்போது இறுதி கட்டத்தை நுழைந்து விட்டது. மாவோயிஸ்ட்டுகள் இப்போது நேரடிப் போராட்டம் நடத்த முடியாததால் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராக கோழைத்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

தீவிரவாதிகளுடனான சண்டையில் வீரமரணமடைந்த வீரர்களின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். சி.ஆர்.பி.எஃப் வீரர்களின் விசுவாசத்தை சிதைக்க உலகில் எந்த குண்டும் இல்லை. இழப்பீடு தொகை எவ்வளவு வழங்கினாலும் இழந்த உயிருக்கு அது ஈடாகாது. ஆனாலும் வீரமரணம் அடைந்த வீரரின் குடும்பத்திற்கு இழப்பீடு தொகையாக ஒரு கோடி ரூபாய் வழங்கப்படுகிறது.

நாங்கள் 2016ஆம் ஆண்டில்

# ஐ.எஸ். இற்கு ஆள்சேர்த்த கு... பீகார் ஆசிரியருக்கு 7 ஆண்...



(கேரளா)

கேரளாவில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு ஆட்கள் சேர்த்த குற்றச்சாட்டில் பீகாரை சேர்ந்த யாஸ்மீன் முகம்மது ஜாஹீத்துக்கு எர்ணாகுளத்தில் உள்ள என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கேரளாவில் கடந்த 2016இல் காணாமல்போன 21 பேர் ஐ.எஸ். அமைப்பில் சேர்ந்ததாக பரபரப்பு உருவானது. இதில் காசர்கோடு மாவட்டத்தை சேர்ந்த 15 பேர் ஐ.எஸ். அமைப்பில் சேர்வதற்காக சட்டவிரோதமாக ஆப்கானிஸ்தான் சென்றது தெரியவந்தது.

இது தொடர்பான வழக்கை பின்னர் என்.ஐ.ஏ. விசாரித்தது. இதில் காசர்கோடு மாவட்டத்தில் அப்துல் ரஷீத் அப்துல்லா என்பவர் ஐ.எஸ். அமைப்புக்கு ஆட்கள் சேர்த்து வந்ததும் நிதி திரட்டி வந்ததும் தெரியவந்தது.

இவரது செயற்பாடுகளுக்கு மலப்புரத்தில் ஆசிரியையாக பணியாற்றிய பீகார் பெண் யாஸ்மீன் உடந்தையாக இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில், யாஸ்மீன் தனது குழந்தையுடன் ஆப்கானிஸ்தான் செல்ல முயன்ற போது, டில்லி விமான நிலையத்தில் கடந்த 2016, ஜூலை 30ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பான வழக்கை எர்ணாகுளத்தில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றம் விசாரித்து வந்தது. இந்த வழக்கில் முதன்மை குற்றவாளி அப்துல்லா, இரண்டாவது குற்றவாளி யாஸ் மீனுக்கு எதிராக என்.ஐ.ஏ. கடந்த ஆண்டு ஜனவரியில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

இந்நிலையில் இந்த வழக்கில் யாஸ்மீன் குற்றவாளி என சிறப்பு நீதிபதி எஸ்.சந்தோஷ் குமார் நேற்று

# ஒரு வாரத்தில் 65 ஆயிரம் கோடியை இழந்த ...




(டில்லி)

பேஸ்புக் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களின் தகவல்கள் திருடப்பட்டதையடுத்து அந்நிறுவனம் பங்கு வர்த்தகத்தில் ரூ.65 ஆயிரம் கோடியை இழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


இங்கிலாந்து நாட்டை சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்ற நிறுவனம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பேஸ்புக் நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெற்று மக்கள் மனதில் மாற்றத்தை உண்டாக்கி, தேர்தலில் முடிவுகள் மாற பெரிதும் உதவி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்ததே பேஸ்புக் பங்குகள் வீழ்ச்சியடைய காரணமாக இருந்தது.

காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியும், கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி அலெக்சாண்டர் நிக்ஸை அண்மையில் சந்தித்து வரும் 2019 ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்ளப்போவதாக பா.ஜ.க. தனது சந்தேகத்தை வெளியிட்டுள்ளது. பேஸ்புக்கிலிருந்து தகவல் திருடப்பட்டது உண்மைதான் என பேஸ்புக் நிறுவுநர் மார்க் ஒப்புக் கொண்டது பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இதனால் சமூக வலைத்தளத்தில் டெலிட் பேஸ்புக் என்ற ஹேஷ்டேக் வைரல் ஆனது. பலரும் பேஸ்புக் அப்ளி

# வெளிநாடு

## ...லட்டுக்களை விரட்ட ...டது - ராஜ்நாத் சிங்



இருந்தே இதனை ஆரம்பித்தோம். இன்று இந்த செய்தியை உங்களுடன் பகிர் ந்து கொள்கிறேன். நக்சலைட்டுகள், தீவிர வாதிகள் ஆகியோருக்கு எதிரான போரின் போதும் அல்லது தேர்தல் நடை பெறும் போதும் சிஆர்பிஎப் வீரர்களை தேசம் நினைவுகூர்கிறது. (சிஆர்பிஎஃப்) பினர் அரசியலமைப்பின் பாதுகாவலர்க ளாக இருக்கிறார்கள். மேலும் நிறைவான பணியை செய்து வருகிறார்கள்என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10)

## ...ந்த குற்றச்சாட்டில் ...ஆண்டுகள் சிறை



முன்தினம் அறிவித்தார். யாஸ்மீனுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.25 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

முதன்மை குற்றவாளி அப்துல்லா தற்போது ஆப்கானிஸ்தானில் இருப் பதாக நம்பப்படுகிறது. கேரளாவில் ஐ.எஸ். தொடர்பான வழக்கில் வெளி யான முதல் தீர்ப்பு இதுவாகும்.

தலைமறைவாகியுள்ள அப்துல் லாவை கைது செய்த பொலிஸார் நட வடிக்கை மேற்கொண்டு வருகின்ற னர். (10)

## ...த பேஸ்புக்

கேஷனை தங்கள் மொபைலில் இரு ந்து நீக்கினார்கள். இதனால் மார்க் ஜுக்கர்பெர்கின் சொத்து மதிப்பு வெகுவாக குறைந்திருக்கிறது.

பேஸ்புக் நிறுவனம் பங்கு வர்த்தகத் தில் 65 ஆயிரம் கோடியை இழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. வரும் காலங் களில் இது மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் எழுந்துள்ளது. (10)

## கொரிய தீபகற்ப உயர் அதிகாரிகளின் பேச்சுவார்த்தை 29ஆம் திகதி ஆரம்பம்

(சியோல்)

வடகொரியா- தென்கொ ரியா ஜனாதிபதிகள் அடுத்த மாதம் சந்திக்கவுள்ள நிலை யில் இருநாடுகளின் அதிகா ரிகள் மட்டத்தில் வரும் 29 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடைபெறும்.

ஐக்கிய நாடுகள் சபை யின் தடையை தகர்த்து, ஏவுகணை சோதனை, அணு குண்டு பரிசோதனை என உலக நாடுகளை அதிர வைத்த வடகொரிய ஜனாதி பதி கிம் ஜாங் உன், தற்போது சில மாதங்களாக மனம் மாறி வருகிறார்.

சமீபத்தில் தென்கொரியா தலைநகர் சியோலில் நடை பெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு தனதுநாட்டு அணியை அனுப்பியது, தென் கொரியா அரசு பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பேச்சுவார்த்தைக்கு வந்த தென்கொரிய பிரதிநிதிகளி டம் இப்போதைக்கு ஏவு கணை சோதனைகள் இருக் காது எனவும், அமெரிக்கா உடன் பேச தயாராக இருப் பதாகவும் கிம் தெரிவித்த தாக கூறப்பட்டது.

கிம்ஜாங் உன் உடனான பேச்சுவார்த்தைக்கு டொனால்ட் ட்ரம்ப்பும் சம்மதம் தெரி வித்துள்ள நிலையில் வரும் மே மாதத்தில் அமெரிக்கா - வடகொரியா இடையேயான பேச்சுவார்த்தை நடக்க இருப் பதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

அதற்கு முன்னதாக வட கொரியா - தென்கொரியா ஜனாதிபதிகள் வரும் ஏப்ரல் மாதம் நேருக்குநேர் சந்தித் துப்பேச ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. அதற்கு பாதை அமைக்கும் வகை யில் இருநாட்டு உயரதிகா ரிகள் இடையே மார்ச் 29 ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் மூன்று உயர திகாரிகளின் பெயர்களை வடகொரியா அறிவித்துள்ளது. அமைதி மறு இணைப்பு குழு வின் தலைவர் ரி சோன்-குவான் தலைமையிலான இந்த குழுவினர் தான் முன் னர் குளிர்கால ஒலிம்பிக் போட்டி யில் வட கொரியா பங்கேற்பதற் கான சமரசப் பேச்சுவார்த்தை யில் ஈடுபட்டனர் என்பது குறிப் பிடத்தக்கது. (10)

## பாகிஸ்தான்தின இராணுவ அணிவகுப்பில் இந்திய இராணுவ அதிகாரிகள் பங்கேற்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தின இரா ணுவ அணிவகுப்பு நிகழ்ச் சியில் இந்திய இராணுவ உயர் அதிகாரி சஞ்சய் விஷ் வாஸ்ராவ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் பங் கேற்று பார்வையிட்டனர்.

பாகிஸ்தான், 1956 ஆம் ஆண்டு மார்ச் 23 ஆம்திகதி, உலகின் முதல் இஸ்லாமிய குடியரசு ஆனது. அதைக் கொண்டாடும் வகையில் ஆண்டு தோறும் 'பாகிஸ்தான் தினம்' என்ற பெயரில் இரா ணுவ அணிவகுப்பு நடத்துவது வழக்கம்.

இதில் இந்திய தூதரக அதிகாரிகள் பங்கேற்பது இல்லை.

இந்திய, பாகிஸ்தான் உற வில் விரிசல் ஏற்பட்டு உள்ள நிலையிலும், கடந்த வெள்ளிக் கிழமை நடந்த இராணுவ அணிவகுப்பில், அங்கு உள்ள இந்திய தூதரகத்தில் பணி யாற்றும் இராணுவ அதிகாரி களுக்கும், உயர் அதிகாரி களுக்கும்பாகிஸ்தான் இராணு வம் அழைப்பு விடுத்தது.

இந்தியாவுக்கு சமாதான செய்தி விடுக்கும் வகையில்



பாகிஸ்தான் இராணுவ தள பதி கமர் ஜாவத் பஜ்வா இந்த நடவடிக்கையை மேற்கொண்ட தாக இராணுவ உயர் அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறும் போது, இந்திய இராணுவ பிரதிநிதிகளை, பாகிஸ்தான் தின இராணுவ அணிவகுப்பை பார்வையிட அழைப்பு விடுத்த தன் பின்னணி, பாகிஸ் தான் அமைதியைத்தான் விரும்புகிறது என்ற தகவலை தெரிவிக்கத்தான் எனத் தெரி வித்தார்.

பாகிஸ்தான் தின இரா ணுவ அணிவகுப்பு நிகழ்ச்சி யில் இந்திய இராணுவ உயர் அதிகாரி சஞ்சய் விஷ்வாஸ் ராவ் தலைமையிலான பிரதி நிதிகள் குழுவினர் பங்கேற்று பார்வையிட்ட னர்.

காஷ்மீரில் எல்லை கட்டுப் பாட்டு கோடு பகுதியில் இரு தரப்பினரிடையே தொடர்ந்து மோதல்கள் நடைபெற்று வரு கிற நிலையில், பாகிஸ்தான் தின இராணுவ அணிவகுப்பு நிகழ்ச்சியில், இந்திய உயர் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுத்து, அவர்கள் பங்கேற் றது முக்கியத்துவம் வாய்ந்த தாக அமைகிறது.

ஐ.நா.சபை இந்தியா பாகி ஸ்தான் இடையே சமரப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் பாக். நிகழ்வொன்றில் இந்திய இராணுவ வீரர்கள் பங்கேற்றி ருப்பது உலகநாடுகளின் கவ னத்தை ஈர்த்துள்ளது. (10)

## பட்டினியால் மடியும் அபாயத்தில் உலகில் பன்னிரண்டு கோடிப்பேர்

### ஐ.நா. அதிர்ச்சித் தகவல்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டம் அமெரிக்காவின் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற் றது. இந்தக் கூட்டத்தில், ஐ.நாவின் உலக உணவு அமைப்பின் செயல் இயக்கு நர் டேவிட் பியாஸ்லி உரை யாற்றினார். அவர்கூறியதாவது,

ஐம்பது, நூறு ஆண்டு களுக்குமுன்பு வரை, பல்வேறு உலக நாடுகளை பஞ்சம் தாக்கி வந்தது. இதில், போதிய உணவும், நீரும் இல்லாமல் ஏராளமான மக்கள் மடிந்த னர். ஆனால், தற்போது அந்த நிலைமை மாறிவிட்டது. ஒவ் வொரு நாடும் வேளாண் மைக்கு முக்கியத்துவம் அளிக்க தொடங்கியுள்ளதால் உணவு உற்பத்தி கணிசமாக அதிகரித் துள்ளது. அதனால், எந்த நாட்டி லும் பஞ்சம் ஏற்படும் சூழ் நிலை இப்போது இல்லை.

அதேசமயத்தில், போர் மற்றும் உள்நாட்டு மோதல் களால் அரசியல் ஸ்திரமற்ற சூழல் நிலவி வரும் நாடு களில், கடுமையான உண வுப் பற்றாக்குறை ஏற்பட்டுள் ளது. குறிப்பாக, சோமாலியா, யேமன், தெற்கு சூடான், நைஜீ ரியா ஆகிய நாடுகளில் உண வுப் பஞ்சம் நிலவுகிறது. இந்த நாடுகளில் மட்டும் சுமார் 32 கோடிபேர்பசிவேளைக்கு உண வின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், உலகம் முழு வதும் சுமார் 12 கோடி பேர், பட்டினியால்மடியும் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர்.

மேற்குறிப்பிட்ட மக்கள், உணவின்றி பட்டினியால் வாடுவதற்கு பிரதான காரண மாக விளங்குவது உள்நாட்டு குழப்பம் மட்டுமே. எனவே, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இந்த விவகாரங்களில் தலையிட்டு அதுபோன்ற நாடுகளில் அமைதி ஏற்பட உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (10)

## ஊழலுக்கெதிரான போர்க்கொடியுடன் பெரு நாட்டின் புதிய ஜனாதிபதியானார் மார்டின்



(லிமா)

பெரு நாட்டின் புதிய ஜனா திபதியாக பதவியேற்றுள்ள மார்டின் விஸ்காரா, ஊழ லுக்கு எதிராக போராட உள் ளேன் என தெரிவித்துள்ளார்.

பெரு நாட்டின் ஜனாதிப தியாக பதவி வகித்து வந்தார் பெட்ரோ பப்லோ குசின்ஸ்கி. இவர் அமைச்சராக இருந்த போது பங்குதாரராக இருந்த நிறுவனத்துக்கு அரசு ஒப்பந் தம் வழங்கப்பட்டது.

இதில் முறைகேடு நடந் திருப்பதாக எழுந்த புகாரை அடுத்து ஜனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத் ததையடுத்து அவர் பதவி விலகினார்.

இந்நிலையில், பெரு நாட் டின் புதிய ஜனாதிபதியாக மார்டின் விஸ்காரா நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டார். அப்போது சத்தி யப்பிரமாணம் செய்கையில், அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஊழலை ஒழிப்பதை தலையாய கட மையாகக் கொண்டு செயற் பட உள்ளதாக அவர் உறுதி யளித்தார். (10)

## கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்தில் லண்டன் அதிகாரிகள் அதிரடி சோதனை

(லண்டன்)

லண்டன் 'பேஸ்புக் பாவ னையாளர்களின் சுயவிவ ரக்குறிப்புகளை திருடியதாக குற்றஞ்சாட்டப்படும் கேம் பிரிட்ஜ் அனலிட்டிகா நிறு வனத்தில் லண்டன் அதி காரிகள் அதிரடியாக சோதனை நடத்தியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்பின் வெற் றிக்காக இந்த நிறுவனம் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப் பட்டு லண்டன் நீதிமன்ற உத் தரவின் பேரில் கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்தில் தகவல் ஆணையர் எலிச பெத் தலைமையில் 18 அதி காரிகள் சோதனையிட்டனர்.

பல மணி நேரம் நீடித்த சோதனையில் முக்கிய ஆதா ரங்களும், ஆவணங்களும், கணனிகளில் இருந்த தக வல்களும் சிக்கியிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. தகவல் திருட்டு தொடர்பான முழுவிபரமும் விரைவில் லண்டன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எலிச பெத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய யூனியனை தொடர்ந்து வேறு ஒரு இடத்திலும் தக வல் திருட்டு தொடர்பான விசா ரணை நடைபெறுவதால் பேஸ்புக் நிறுவனத்திற்கு நெருக்கடி அதிகரித்துள்ளது.

முன்னதாக பாவனை யாளர்களின் தகவல்களை கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா நிறுவனத்துடன் பகிர்ந்து கொண்டதில் தவறுகள் நடத் திருப்பதை பேஸ்புக் நிறு வனர் ஜுக்கர்பெர்க் ஒப்புக் கொண்டார். மேலும் அவர் கூறுகையில், பேஸ்புக் தகவல்கள் திருடப்படுவதை தடுக்க, அதன் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்த திட்ட மிடப்பட்டுள்ளது.

இந் தாண்டு இறுதிக்குள் 20 ஆயிரம் ஊழியர்கள் பாது காப்பு பணிகளுக்கு பயன்படு த்தப்படுவார்கள். இவர்கள் போலி கணக்குகள் தொடங் குவதையும், பொய்தகவல்கள் பரப்பப்படுவதையும் கண் காணிப்பார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (10)

## தொடர்ந்து 17 மணித்தியாலங்கள் பயணித்து இங்கிலாந்து விமானம் சாதனை

(லண்டன்)

அவுஸ்திரேலியாவில் இருந்து இங்கிலாந்துக்கு தொடர்ந்து 17 மணி நேரம் பய ணித்து குவாண்டாஸ் 787.9 டிரீம் லைனர் நிறு வனத்தின் விமானம் சாதனை படை த்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இருந்து இங்கிலாந்து தலைநகர் லண்டனுக்கு 2 விமானங்கள் மூலம் பயணம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நிலையில் தற்போது ஒரே விமானம் இடையில் நிற் காமல் பெர்த் நகரில் இருந்து லண்டனுக்கு பயணம் செய் துள்ளது. குவாண்டாஸ் 787. 9 டிரீம் லைனர்' நிறுவனத் தின் விமானம் இச் சாதனை நிகழ்த்தியுள்ளது. பெர்த்நகரில் இருந்து புறப்பட்ட இந்த விமா னம் 14,498 கி.மீ. (9,009 மைல்) தூரம் இடை நிற்காமல் 17 மணி நேரம் பயணித்தது.

மேலும் இது இடையில் நிற்காமல் நீண்ட தூரம் பறந்த விமானம் என்ற பெருமை பெற்றுள்ளது. தோகாவில் இருந்து ஆக்லாந்துக்கு 14,529 கி.மீ. தூரம் பறந்து முத லிடம் பிடித்துள்ளது.

தற்போது பெர்த்நகரில் இருந்து லண்டனை சென்ற டைந்த வரலாற்று சிறப்பு மிக்க இந்த விமானத்தில் 200 பயணிகள் மற்றும் 16 ஊழியர்கள் பயணம் மேற் கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (10)

# சீனாவின் திட்டத்தை இடை நிறுத்தி விசாரணை நடத்தக் கோரிக்கை

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

சீனாவினால் மேற்கொள்ளப்படும் அத்தனகல மற்றும் மினுவாங்கொட நீர் விநியோக திட்டத்தை இடைநிறுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தி உள்ளார்.

குறித்த திட்டமானது, சீனாவின் பல மில்லியன் டொலர்கள் நிதியில் கடந்த 2016ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

229.5 மில்லியன் டொலர் மொத்த மதிப்பீட்டுடைய இந்த திட்டத்துக்கு சீன அரசாங்கம் 85 வீத நிதியையும், இலங்கையின் வங்கி ஒன்று கடன் அடிப்படையில் 15 வீத நிதியை வழங்குகிறது.

இதற்கமைய, இந்தத் திட்டத்துக்காக இலங்கையின் திறைசேரி ஏற்கனவே 8.77 மில்லியன் டொலர்களை விடுவித்துள்ளது.

எனினும், குறித்த திட்டத்துக்கு அதிக விலைகோரலின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, இந்தத் திட்டத்தை இடைநிறுத்தி, அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# விமானப்படைக்கு அதிநவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகள்



(கொழும்பு)

விமானப்படைக்கு அதிநவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக, ரஷ்யாவுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரேடார்களினால் கட்டுப்படுத்தப்படும், விமான எதிர்ப்பு ஏவுகணைத்தொகுதி ஒன்றை விமானப்படைக்கு கொள்வனவு செய்வது குறித்தே, பாதுகாப்பு அமைச்சு, ரஷ்யாவுடன் பேச்சு நடத்தி வருகிறது.

S 300 மற்றும் Buk 27 ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இதற்கான பரிசீலனையில் உள்ளன.

இந்த ஏவுகணைகளை, விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களுக்கு எதிராகப் பயன்படுத்த முடியும்.

அத்துடன், இவை சில வகை வழிகாட்டல் (cruise) மற்றும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளை (ballistic) தடுக்கும் திறன் கொண்டவையாகும் எனத் தெரியவந்துள்ளது. (இ-7)

# அரசியல் கட்சியாகிறது மகாசோன் படையணி

(கொழும்பு)

அண்மையில் கண்டியில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டிவிட்ட சிங்களக் கடும்போக்குவாத அமைப்பான, மகாசோன் படையணி, அரசியல் கட்சியாக மாறவுள்ளது.

தமது கட்சியைப் பதிவு செய்வதற்கான ஆவணங்களை அதிகாரிகளிடம் கையளித்திருப்பதாக, மகாசோன் படையணியின் பேச்சாளர் ஒருவர் அநுராதபுரத்தில் தெரிவித்தார்.

"எல்லா இனங்களுக்கும் அரசியல் கட்சிகள் உள்ளன. ஆனால் சிங்களவர்களுக்கு என்று எந்த அரசியல் கட்சிகளும் இல்லை.

எனவே, சிங்களவர்களுக்கான புதிய அரசியல்கட்சியை, மகாசோன் படையணி மற்றும் ஏனைய சில அமைப்புகளுடன் இணைந்து உருவாக்கவுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கண்டி மற்றும் அம்பாறையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை மகாசோன் படையணியே சமூக ஊடகங்களின் ஊடாகவும், நேரடியாகவும் தூண்டி விட்டிருந்தது.

இதற்காக, மகாசோன் படையணியின் தலைவர் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை திட்டித் தீர்த்த ஊடக அமைச்சர் மங்கள



(கொழும்பு)

அரச நிறுவனங்களின் பிரதானிகளை அழைத்து, ஊடக அமைச்சர் மங்கள சமரவீர திட்டித் தீர்த்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் அபிவிருத்தி மற்றும் ஜனநாயக செயற்பாடுகள் குறித்து ஊடகங்களில் உரிய பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை என அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த விடயம் குறித்து இரண்டு வாரங்களில் முன்னேற்றத்தை பதிவு செய்யத் தவறும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக தீர்மானம் எடுக்க நேரிடும் என மங்கள எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைக்காட்சி போன்ற அரச ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் இந்தக்கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் குறித்து அரச ஊடகங்கள் மக்களை தெளிவுபடுத்தாத காரணத்தினால் தேர்தலில் தோல்வியைத் தழுவ நேரிட்டதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### ஓசி கேட்குமுன்...

ஓசி கேட்பதே வேலையாகத் திரிபவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள். எப்போதாவது கேட்கிறவர்கள் கூட கீழ்க்கண்ட சில விடயங்களைக் கருத்தில் கொள்வது நல்லது.

ஒருவரிடம் ஒன்றை நாம் ஓசி கேட்குமுன் அதே உதவியை நமக்குத் திரும்பச் செய்யத் தகுதி இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உதாரணமாக கார் இல்லாத ஒருவர், தனக்குக் கார் ஓட்டத் தெரியும் என்பதற்காக நண்பரின் காரை ஓசி கேட்கக்கூடாது. V.C.P., V.C.R. போன்ற வீடியோ கருவி இல்லாதவர்கள் அதை மற்றவர்களிடம் ஓசி கேட்கக்கூடாது.

மிக நெருக்கமானவர்கள் தவிர மற்றவர்கள் இத்தகைய ஓசிகளை விரும்புவது இல்லை. அதாவது இதே போன்ற உதவியை நாம் இவரிடம் பெற முடியாது என்கிற நிலைமையில் எவருமே ஓசி கொடுக்க விரும்புவதில்லை. இது ஓசி கேட்பவர்களுக்கு ஏனோ புரிவதே இல்லை, விளைவு? விலகல்; மனக்கசப்பு.

ஓசி வாங்கிப் பயன்படுத்தப்படுகிற பொருள், நாம் வாங்குகிற நேரம் பார்த்துப் பெரிதாக ஒரு வேட்டு வைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தச் செலவைச் செய்யக்கூடிய திராணி நமக்கு உண்டா? என்று சிந்திக்க வேண்டும்.

நாம் ஒரு கமெராவை ஓசி வாங்கினோம். நாம் பயன்படுத்திய நேரம் பார்த்துப் பெரிதாக ஒரு வேட்டு வைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்தச் செலவைச் செய்யக்கூடிய திராணி நமக்கு உண்டா? என்று சிந்திக்க வேண்டும்.

நாம் ஒரு கமெராவை ஓசி வாங்கினோம். நாம் பயன்படுத்திய நேரம் பார்த்து 'ஷட்டர் ஸ்ட்ரக்' ஏற்பட்டு விட்டது. ரிப்பேர் செய்ய 600 ரூபாய் ஆகும். நமக்கு இது கட்டுப்படியாகுமா? அல்லது நம் கெட்ட நேரம் அது கீழே விழுந்து தொலைகிறது. 3000 ரூபாய் கொடுத்து அழ முடியுமா? இயலாதல்லவா? அப்புறம் ஏன் வாங்க வேண்டும்?

சாதாரண காபிப் பொடிதான் ஓசி கேட்டோம். அவர்கள் மனம் கசந்து கொடுத்தார்களா? அல்லது மனப்பூர்வமாகக் கொடுத்தார்களா? என்பதைத் தெரிந்து கொள்வதில் நாம் அக்கறை காட்ட வேண்டும். பேச்சில் தொனியில் முகத்தில் தர்ம சங்கடத்துடன் நெளிந்தார்களா என்பதைப்பற்றி நாம் கொஞ்சமேனும் அச்சப்பட வேண்டும். நமக்கு வேலை ஆனால் சரி என்று மட்டுமா சிந்திப்பது?

ஓசி கேட்பவர்களிடம் மேலும் சில கேள்விகள்

1.ஓசி மறுக்கப்பட்டால் அதற்காகச் சங்கடப்பட மாட்டேன் என்று மன உறுதி உங்களுக்கு உண்டா?

2.மறுக்கப்பட்டதற்காக உங்கள் மதிப்பிலிருந்து அவர்களைக் குறைத்து விடமாட்டீர்களா?

3."உங்ககிட்ட அதை ஓசி கேட்கலாம்னு இருந்தேன். ஆனால் பிரியமா இருக்கீங்க. அதைக் கெடுத்துக்குவானேன் என்று அந்த யோசனையைக் கைவிட்டுட்டேன்" என்கிற ரீதியில் பேசி எவரையேனும் நாடி பிடித்துப் பார்த்ததுண்டா?

4. ஓர் ஓசி மறுக்கப்படும் போது நீங்கள் அதை எப்படி எடுத்துக்கொண்டாலும் அவர் உங்களிடமிருந்து விலகிப் போய் விடுவாரே என்று நீங்கள் அக்கறை காட்டியது உண்டா?

என்னத்திற்கு இவ்வளவு கேள்விகள்? பேசாமல் ஓசி கேட்பதற்கு ஒரு கும்பிடு போட்டு விடுவோமே! கௌரவமாகவும் இருக்கும்!

**லேனா தமிழ்வாணன்**

## மணமகள் தேவை

பிறந்த திகதி: 12.01.1971

நட்சத்திரம்: பூசம் 2 ஆம் பாதம்

செவ்வாய் தோஷம் இல்லை.

கனடா பிரஜை (மாதம் இலங்கைப் பணம் ரூபா 60000/- ஓய்வூதியம் பெறுகின்றார்)

6 மாதத்திற்கு ஒரு தடவை இலங்கை வந்து போவார்.

தொடர்புகளுக்கு: செ.சி.பாலா,
618, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:077 158 0080, 021 222 8033


## கிளைபோசெற் இரசாயனம் குறித்து அமைச்சரவைக்கு பரிந்துரைகள்

கிளைபோசெற் இரசாயன மருந்து வகையினை இறக்குமதி செய்வதற்காக விதிக்கப்பட்டிருந்த தடையை தொடர்ந்தும் நீடிப்பது தொடர்பான நிபுணர்கள் குழுவின் பரிந்துரைகள் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இரசாயன மருந்துகள் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கை தமக்கு கிடைத்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார். கடந்த 2015 ஆம் ஆண்டு கிளைபோசெற் இரசாயன மருந்துகள் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டது. வடமத்திய மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி வந்த சிறு நீரக நோய் காரணமாக இந்த தடை முன்னர் விதிக்கப்பட்டது. (இ-7)


## நன்றி நவில்கின்றோம்



கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மாடிப்படிகள் ஏறி சலித்த உள்ளங்களுக்கு நிறைவாக யாழ். நகர மத்தியில் பகீரதப் பிரயத்தனம் செய்து விடாமுயற்சியினால் ஒரு சிறந்த சகல வசதிகளும் கொண்ட அலுவலகத்தை அமைத்து எம்மை ஆற்றுப்படுத்திய யாழ். பிராந்திய உள்நாட்டு இறைவரி ஆணையாளர்

**திரு. பந்துல ஹப்புத்தந்திரிகே** அவர்களுக்கும் சக உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

(இ)

கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், வரி முகவர்கள், யாழ்ப்பாணம்.



## மணி விழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும்

### திரு. இ. செல்வநாயகம் (அதிபர்)
### மு/ சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை

காலம்: 27.03.2018 (செவ்வாய்க்கிழமை)

நேரம்: முற்பகல் 9.30 மணி

இடம்:- பாடசாலை முற்றம்

பன்னிரண்டு ஆண்டுகள்
எமது பள்ளிக்காக
அல்லும் பகலும் அயராது
உழைத்து சாதனைகள்
பல படைத்து மணிவிழாக்
காணும் நாயகனை
வாழ்த்துவோம்



அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
மு/ சிறிசுப்பிரமணிய
வித்தியாசாலை.

(சி-1986)


# கயிலாச யாத்திரை

## ஓர் அனுபவப் பகிர்வு 06

பரமசாமி பஞ்சாட்சரம்

1996 ஆம் ஆண்டு கேபெட் ரிச்சி (Herbert Tichy) என்பவர் கயிலாசமலையை ஏறுவது பற்றி அங்கிருந்த மலைவாழ் மக்களின் தலைவரிடம் கேட்ட போது பாவங்கள் அற்ற மனிதனால் மட்டுமே கையிலை மலையில் ஏறமுடியுமென்று அவர் பதிலளித்தார்.

சாதாரண மக்களால் இம்மலையில் ஏற முடியாது என சில கதைகள் மூலம் விளக்கி மலையேற அனுமதிகிடையாதுஎன்று மலைவாழ் மக்களின் தலைவர் சொன்னார். கேபெட் ரிச்சியும் தனது கயிலாச மலையை ஏறும் முயற்சியை கைவிட்டார்.

தற்பொழுது சீன அரசாங்கம் கயிலை மலையை ஏறுவதற்கு ஒருவருக்கும் அனுமதி கொடுப்பதில்லை (விக்கிபீடியா 'Wiki pedia' இணையத் தளத்தில் பாக்கலாம்)

### மானசரோவர் ஏரி

மானசரோவர் ஏரி கயிலாசமலையின் அடிப்பாகத்தில் இருக்கின்றது. மானசரோவர் என்ற சொல் வடமொழியில் "மனஸ்அரோவர்" என்று அழைக்கப்படுகின்றது. இந்தச் சொல்லின் அர்த்தம் "மனதினாற் படைக்கப்பட்டது" என்பதாகும். பிரம்மாவின் மனத்தில் இருந்து தோன்றியதால் இது மானசரோவர் என்று அழைக்கப்படு கின்றது.

இந்திய மக்களும் நேபாள மக்களும் "மானசரோவர்" என்று சொல்லைப் பாவிக்கின்றனர்.

கயிலாசமலை முடியில் உள்ள பனி உருகிக் கற்களின் ஊடாக வந்து மானசரோவர் ஏரியை அடைகின்றது. ஆகவே மானசரோவர் ஏரியின் நீர் புனித நீராகின்றது. அத்துடன் இந்த ஏரியின் நீர் சுத்தமான தெளிந்த பல நீல நிறமானதாகக் காணப்படுகின்றது.

இந்த ஏரியைச் சூழ்ந்து மலைகள் தான் இருக்கின்றன. இந்த ஏரியின் நீர் ஒரு போதும் நிரம்பி வழிவதில்லை. இந்த ஏரியின் நீர் மலைகளின் அடிப் பாகத்தின் ஊடாக ஊற்றாக வெளியேறி சுரந்து நான்கு பெரிய நதிகளாகத் தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கின்றது.

இந்த நதிகள் அங்கு வாழ்கின்றவர்களுக்கும் மற்றும் அயல் நாட்டவர்களுக்கும் ஜீவ நதிகளாக இப்பொழுதும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

படம் / Picture 7 மானசரோவர் ஏரியும் இராவணன் ஏரியும் / Manasarovar & Ravana's Lakes.




முன்னொரு காலத்திலே இங்கு தண்ணீர் இல்லாமல் குளிர்ந்த பாலைவனமாகி விட்டது என்றும் ரிஷிகளும் முனிவர்களும் (மரீசி, வசிஷ்டர்) பிரம்ம தேவனை நினைத்து தவம் இருந்தார்கள் என்றும், இதை மனதால் அறிந்த பிரம்மா அவர்களின் துன்பம் நீக்கும் வண்ணம், அங்கு இருக்கும் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் மட்டும் இல்லாமல் அண்டி இருக்கும் மக்களுக்காகவும் மானசரோவர் ஏரியைப் படைத்தார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

### கயிலை வரலாறும் நாயன்மார்களும் பெரியார்களும்

எமது நாயன்மார்கள் கயிலைநாதனைத் தொழுது திருமுறைகளைப் பாடி மக்களின் துன்பத்தை நீக்கப் பல அற்புதங்களைச் செய்து வந்துள்ளார்கள். அக்காலத்தில் சாதாரண மக்கள் கயிலைசெல்லாவிட்டாலும் அவர்களின் மனதில் காலம் காலமாகக் கயிலையைப்பற்றிய நம்பிக்கையை இருக்கச்செய்தவை இந்த நாயன்மார்கள் கயிலை பற்றிப்பாடிய திருமுறைகளும் அவர்கள் செய்த அற்புதங்களும் ஆகும்.

இன்றும் சைவ மக்கள் கயிலையைப்பற்றி நாயன்மார்களும், மெய்யடியார்களும் எழுதிய திருமுறைகளைப்பாடிவருவது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது அநேகமாகத் தமிழ் நாட்டிலும் இலங்கை யிலும் உள்ள பல சைவக் கோயில்களிற் கயிலைக் காட்சிச் சித்திரங்களும் கயிலாசவாகனமும் காணக் கூடியதாக இருக்கும். இது கயிலாச நாதன்மேல் மக்கள் கொண்ட பக்தியையும் நம்பிக்கையையும் எடுத்தியம்புகின்றது.

(தொடரும்)

# ஆட்சியாளர்கள் அகங்காரத்தை கைவிடவேண்டும்

## அமைச்சர் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

ஆட்சியாளர்கள் நான் என்ற அகங்காரத்தை கைவிட்டுச் செயற்பட முன்வர வேண்டும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

அம்பாறை திருக்கோயில் பிரதேசத்தின் சங்கமன் கண்டியில் நிர்மாணிக்கப்பட்ட சங்கமன் கிராம வீடமைப்புத் தொகுதியை திறந்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனை கூறியுள்ளார்.

தொடர்ந்தும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

எனது தந்தையார் மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ இலங்கையில் மிகச் சிறப்பான வீடமைப்புத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

2000ஆம் ஆண்டில் யாவருக்கும் புகலிடம் என்பது அவரது தாரக மந்திரமாக இருந்தது. ஆயினும் அதற்குள்ளாக 1993ஆம் ஆண்டு அவர் பயங்கரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது புதல்வன் என்ற வகையில் எனது தந்தையின் கனவை நான் எதிர்வரும் 2025ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றி நாட்டில் வாழும் அனைத்துப் பிரஜைகளுக்கும் சொந்தவீடு கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

2015ஆம் ஆண்டு இந்த அரசாங்கத்தை நாங்கள் பொறுப்பெடுக்கும் போது அனைத்து வழிகளிலும் நாடு சீரழிந்து காணப்பட்டது.

ஆட்சியாளர்களின் அகங்கார போக்குகளே அதற்கான காரணம். எனவே ஆட்சியாளர்கள் அகங்கார போக்குகளை கைவிட்டு செயற்பட முன்வரும்போதுதான் நாடு முன்னேற்றமடையும் எனத் தெரிவித்தார். (இ-7)

# அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு கூட்டமைப்பிற்கு மனோ அறிவுரை

(கொழும்பு)

இக்கட்டான சூழ்நிலைகளின்போது தேசிய அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைகொடுத்துள்ளது. எனவே, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதாக கூறப்படுவது தொடர்பில் அரசிடம் முறையிடுவதற்கு அக்கட்சிக்கு அதிக வாய்ப்பிருக்கின்றது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.



தமிழ்க் கூட்டமைப்பு வெளியிலிருந்து அழுத்தங்களைப் பிரயோகித்தால் நாங்கள் அரசுக்குள் இருந்து கொண்டு அவற்றை அமுல்படுத்த அழுத்தம் கொடுப்போம் எனவும் அமைச்சர் மனோ கணேசன் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான க.கோடீஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய கோடீஸ்வரன், "திருக்கோவில் ஆதார வைத்தியசாலையாக இருக்கின்ற போதிலும் அங்கு மூன்று வைத்தியர்கள் மாத்திரமே பணியாற்றுகின்றனர்.

தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கப்படாமல் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்" என்று சுட்டிக்காட்டியுள்ளார். இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் மனோ கணேசன்,

கிழக்கில் தமிழர்கள் புறக்கணிப்பு எனக் கூறப்படுவதில் உண்மை இருக்கலாம். கிழக்கில் உங்கள் கட்சியும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தான் கூட்டாட்சி நடத்தினீர்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு பதில் வழங்கிய கோடீஸ்வரன், மத்திய அமைச்சின் செயற்பாட்டின் கீழ்தான் வைத்தியசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு இடம்பெற்றுள்ளது. முஸ்லிம் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கப்படுகின்றது.

சம்மாந்துறை, பொத்துவில் ஆகிய பகுதிகளில் இவ்வாறு நடந்துள்ளது. எனவே, இதுபற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். அனைவருக்கும் இந்த நாட்டில் சம உரிமை வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் தான் பிரச்சினைகள் உருவாகின்றன என்றும் தெரிவித்தார். (இ-7)

### "இரகசிய பொலிஸார் கண்கொத்தி பாம்பாக அவதானிப்பு"

# ஒப்பந்த வேலைக்கு தடைபோட்ட மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான எந்தவொரு நபரும் ஒப்பந்த வேலைகளில் ஈடுபட முடியாது என்று மகிந்த ராஜபக்ஷ தடைவிதித்துள்ளார்.



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலமாக வத்தளை, மஹரகம மற்றும் பதுளை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான உறுப்பினர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைக்கும் நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ இதனை வலியுறுத்தியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், தற்போதைக்கு எமது கட்சியின் சார்பில் தெரிவான உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களின் செயற்பாடுகளைக் கொண்டே எதிர்வரும் மாகாணசபை, பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றின் வெற்றி தீர்மானிக்கப்படும். அத்துடன் எமது கட்சியின் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களுடைய செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு மற்றும் இரகசியப் பொலிஸார் ஆகியோர் கண்கொத்தி பாம்பாக அவதானித்துக்கொண்டிருப்பார்கள். எனவே எமது கட்சியின் எந்தவொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினரும் ஒப்பந்த வேலைகளை பொறுப்பெடுக்கவோ அவற்றில் ஈடுபடவோ முடியாது. உள்ளூராட்சி மன்றங்கள் சேவையாற்றுவதற்கே தவிர வருமானம் ஈட்டுவதற்கான இடம் அல்ல என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# ரணில் மீது நம்பிக்கையில்லை

# நாட்டு மக்களின் நலனை கருத்திற்கொண்டு முடிவு

## சு.க. அமைச்சர் சந்திம தெரிவிப்பு



(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் வாக்கெடுப்பின் போது நாட்டு மக்களின் சாதக பாதகங்களை வைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கை எடுக்கும் என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

காலி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார். (இ-7)

# ரணிலுக்கு ஆதரவாக கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

பிரதமர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கையொப்பம் திரட்டப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கூட்டு எதிரணியால் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகியன ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்றன.

இம்முன்னணியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதன் போது பிரதமருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை சம்பந்தமாக பேசப்பட்டுள்ளதுடன், அதைத் தோற்கடிப்பதற்காக அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓரணியில் திரள வேண்டும் என்று யோசனை முன்வைக்கப்பட்டு, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், பிரதமர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே கையொப்பம் திரட்டப்பட்டு அது சபை முதல்வரான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.



அமைச்சர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், சம்பிக்க ரணவக்க உட்பட முக்கிய உறுப்பினர்கள் பிரதமருக்கு ஆதரவான பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளனர். (இ-7)

# அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தலைநகரில் இன்று பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படாத நிலையில் தலைநகர் கொழும்பில் இன்று திங்கட்கிழமை பாரிய ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் ஒரு மாதத்தை எட்டுகின்ற நிலையில் அரசாங்கத்துடன் இடம்பெற்ற அனைத்து பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

இந்நிலையில் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வார்ப்பாட்டத்தில் அனைத்து பல்கலைக்கழக [illegible] பிக்குமார் ஒன்றியம், மருத்துவ பீட மாணவர்கள் செயற்பாட்டாளர்கள் சங்கம், மருத்துவபீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் உள்ளிட்ட பலர்கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்களின் இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக அரச பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட 30 உயர்கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# 41 இலட்சம் ரூபாவுடன் கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

(கொழும்பு)

41 இலட்சம் இலங்கை ரூபா பெறுமதியான சவுதி ரியால் நாணயத்தாள்களை பாதணிகளில் மறைத்து வைத்திருந்த, கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் முனைய பகுதியில் உள்ள சுங்க வரி தீர்வையற்ற வர்த்தக நிலையம் ஒன்றின் ஊழியரை சுங்க அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு, குரண பிரதேசத்தை சேர்ந்த 30 வயது நபரே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வெளிநாட்டு நாணயத்தாள்களை மற்றுமொரு நபருக்கு வழங்கி அவர் மூலம் அவற்றை வெளிநாட்டிற்கு கடத்தி செல்வதற்காக இவர் நாணயத்தாள்களை தனது பாதணிக்குள் மறைத்து வைத்திருந்ததாக சுங்க திணைக்களத்தின் பேச்சாளர் விபுல மினுவன்பிட்டிய தெரிவித்துள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 41 இலட்சம் ரூபா பெறும தியான 500 மற்றும் 200 ரியால் நாணயத்தாள்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். சம்பவம் குறித்து கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# மன்னிப்புக் கேட்பதற்கும் மன்னிப்பு வழங்குவதற்கும் முன்வருதல் வேண்டும்

(ஏறாவூர்)

நாட்டு நலனைக் கருத்திற்கொண்டு தவறிழைத்தவர்கள் மன்னிப்புக் கேட்பதற்கும் பாதிக்கப்பட்டவர்கள் மன்னிப்பு வழங்குவதற்கும் முன்வந்தால் அழிவைத் தவிர்க்கலாம் என சிரேஷ்ட ஆய்வாளரும் சமூகவியல் பயிற்சியாளருமான ஹென்றி டி மெல் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் சர்வ மதப் பேரவை உறுப்பினர்களின் கடந்த கால வேலைத் திட்டங்களின் மதிப்பீடு தொடர்பான ஆய்வில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டு நலனைக் கருத்திற் கொண்டு இன நல்லிணக்கத்திற்காகவும் சக வாழ்வுக்காகவும் பிரதேசத்திற்கு பொருத்தமான செயற்பாடுகளை அடையாளம் கொண்டு செயலாற்ற வேண்டும். யுத்தகாலத்தில் இடம்பெற்ற தவறுகள், குறைபாடுகள் எதிர்காலத்தில் மீண்டும் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அவைபற்றி ஆராய வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை கடலில் நீந்தி தமிழக மாணவன் சாதனை



(சென்னை)

தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை உள்ள கடல் பகுதியை 11மணி 55 நிமிடத்தில் நீந்தி, சென்னையைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை சாதனை படைத்தார்.

அவருக்கு பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

சென்னை முடிச்சூர் லட்சுமிபுரம் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் மகன் ராஜேஷ்வரபிரபு (வயது-20) தனியார் பொறியியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு படித்து வரும் இவர், சிறு வயதில் இருந்தே நீச்சல் பயிற்சியில் ஆர்வம் காட்டி வந்தார்.

இந்த நிலையில், தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு கடலில் நீந்தி சாதனை படைக்க எண்ணினார்.

இதையடுத்து அவர் கடந்த வெள்ளிக்கிழமை இராமேஸ்வரம் வந்து 20 கடல் மைல் தொலைவை நீந்தி கடக்க மத்திய, மாநில அரசுகளிடமும், இலங்கை அரசிடமும் அனுமதி பெற்று படகு மூலம் தலைமன்னாருக்கு சென்றார்.

அவருடன் பாதுகாப்புக்காக மீனவர்கள், படகு இயந்திர பழுது நீக்குபவர் மற்றும் பயிற்சியாளர் விஜயகுமார் ஆகியோர் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் ஒரு விசைப்படகு மற்றும் நாட்டுப் படகில் தேவையான உணவு மற்றும் உபகரணங்களுடன் ஒரு குழுவாக சென்றனர்.

இதைத்தொடர்ந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு தலைமன்னாரில் இருந்து கடலில் இராஜேஷ்வர பிரபு நீந்தத் தொடங்கினார். அவருக்கு சர்வதேச கடல் எல்லை வரை இலங்கை கடற்படையினர் பாதுகாப்பு அளித்தனர்.

பின்னர் தொடர்ந்து 11 மணி 55 நிமிடங்கள் கடலில் நீந்தி பிற்பகல் 2.55 மணிக்கு தனுஷ்கோடி அரிச்சல்முனையை வந்தடைந்தார்.

அவருக்கு குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொது மக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதுகுறித்து நீச்சல் வீரர் ராஜேஷ்வர பிரபு கூறும் போது, "தலைமன்னாரில் இருந்து அதிகாலை 3 மணிக்கு நீந்தத் தொடங்கிய சில மணி நேரத்திலேயே கடல் வேகத்துடன் காணப்பட்டது. இதனால் எனக்கு சிரமமாக இருந்தது.

இருந்தாலும் கடலில் தொடர்ந்து நீந்தினேன். பின்னர் கரைக்கு வரும் போது நீரோட்டம் அதிகமாக இருந்ததால் இங்கும் எனக்கு சிரமம் ஏற்பட்டது.

நீந்தும் போது ஜெல்லி மீன்கள் அதிகளவில் காணப்பட்டன. அவற்றை கடந்து நீந்தி வந்தேன் என்றார். (இ-7-281)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1367

Search for people, places and things Nagendram Home

### லக்சன்

எங்க தாத்தா தூக்கத்திலேயே செத்துப் போயிட்டாரு... நல்ல சாவு.



ஆனா அவர் ஓட்டின கார்ல இருந்த 5 பேரும்தான் அலறிக்கிட்டே செத்தாய்ங்க... லூசுப் பயலுக....

### மைக்கல்

மகன்: நாளையிலிருந்து நாம பணக்காரர் ஆகிவிடலாம் அப்பா

அப்பா: எப்படிடா?



மகன்: நாளைக்கு எங்க கணக்கு டீச்சர் பைசாவை ரூபாயா மாத்திறது எப்படின்னு சொல்லித்தரப் போறாங்களாம்


### ராகுலன்

ஒரு கார் இருந்தால் ஆடம்பரமாக வாழலாம்...!




ஒரு மிதிவண்டி இருந்தால் ஆரோக்கியமாக வாழலாம்...!

### சபேஷ்




### ராம்குமார்

சமத்துவம் சமபங்கு



எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிப்பது

பலவீனமானவர்களுக்கு உரிய பங்கை உறுதி செய்வது

### ராஜா

உலகம் நம்மை உற்றுப் பார்க்கனும்னா



நாம கொஞ்சம் மங்கலா தெரிஞ்சாகூட போதும்!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு கோரி கஞுவாஞ்சிக்குடியில் கையெழுத்து போராட்டம்





(ஏறாவூர்)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கிளிநொச்சியை சேர்ந்த தமிழ் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனை அவரது பிள்ளைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உடனடியாக நிபந்தனைகளின்றி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரி பொதுமக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடியிலும் அப்பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து பொது மக்களிடம் கையெழுத்துப் பெறும்நடவடிக்கையை நேற்று முன்னெடுத்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தைக்கு முன்பாக இடம்பெற்ற இக்கையெழுத்து போராட்டத்தில் பொதுமக்கள், அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் ஆர்வதுடன் கலந்து கொண்டு கையெழுத்துக்களை இட்டனர்.

இவ்வாறு மக்களிடம் பெறப்படும் கையெழுத்துக்களைத் திரட்டி உரிய கோரிக்கை அடங்கிய கடிதத்துடன் ஜனாதிபதிக்கு அனுப்பவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (இ-7)

## அரசியல் கைதியின் விடயத்தை ஜனாதிபதி கையாள வேண்டும்

(ஏறாவூர்)

தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளின் பரிதாப நிலை என்பது இந்த உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்திருக்கின்றது. ஆனால் எமது நாட்டு ஜனாதிபதி, இப்பிள்ளைகளின் பரிதாப நிலையை இன்னும் திரும்பிப் பார்க்கவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில், தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் விடுதலை தொடர்பாக இடம்பெற்ற கையெழுத்து சேகரிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கலந்துகொண்டு கருத்துக் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு, எமது நாட்டு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதிக்கு மாத்திரமே ஒரு ஆயுள் தண்டனைக் கைதியை விடுதலை செய்வதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளவர்.

ஆட்சி மாற்றத்தின் போது ஜனாதிபதியிடம்எமது தலைமை முன்வைத்த முதற் கோரிக்கைக்கு அமைவாக, சிறைச்சாலைகளில் பல துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற எமது தமிழ் அரசியற் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

ஜனாதிபதியை ஒரு மனிதாபிமானம் உள்ளவராகப் பார்ப்பதனாலேயே மட்டக்களப்பு மக்கள் இணைந்து இக்கையொப்பம் பெறுகின்ற நடவடிக்கையை மேற்கொள்கின்றோம்.

இல்லாவிட்டால் நாங்கள் வேறு வழிகளில் மனிதாபிமான போராட்டங்களை நடத்தி ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்ற விடயத்தை மேற்கொள்வோம் எனத் தெரிவித்தார். (இ-7)

## ரணிலுக்கு எதிரான வாக்கெடுப்பின் போது ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் இணைவர்



(கொழும்பு)

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தயாராக இருப்பதாக கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷெயான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமருக்கு ஆதரவளிப்பதாக கையெழுத்திட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் கட்சிக்குள் எந்த குறைபாடுகள் காணப்பட்டாலும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக தமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே தெரிவித்தார்.

அத்துடன் பிரதமர் பதவியில் எந்த மாற்றங்களும் ஏற்படாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் குழப்பத்தை ஏற்படுத்திய பெண் உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் பெண் உறுப்பினர் ஒருவர் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கல்கிஸை நகர சபை உறுப்பினராக செயற்படும் மாரினா ஆப்தீன் எனும் பெண், கட்சி தலைமையகத்தின் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக எச்சரித்துள்ளார்.

தன்னை தெஹிவளை கல்கிஸை நகர சபையின் மேயராக நியமிக்கவில்லை என்றால் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக எச்சரித்தார்.

1991ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தெஹிவளை - கல்கிஸை மாநகர சபை உறுப்பினராக செயற்பட்டவர் கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் அதிக வாக்கு வீதங்களை பெற்று வெற்றி பெற்றிருந்தார்.

எனினும் ஐக்கிய தேசிய கட்சி தலைமைத்துவத்தினால், சுனேத்ரா ரணசிங்க என்பவரை மேயராக பெயரிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் தெஹிவளை - கல்கிஸை நகர சபையில் நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் 19 பேரில் 6 பேர் சுனேத்ரா ரணசிங்கவுக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)



சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முதியோர் நலன் காக்கும் சங்கத்தில் உள்ள பயனாளிகளில் மிகவும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய சூழ்நிலைகளால் நலிந்து போசாக்கு உணவு இன்றி காணப்படும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பால்மாக்களும் அத்துடன் எதிர் வரும் சித்திரை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு புத்தாடைகளும் அன்பளிப்பாக தந்துதவுமாறு முதியோர் நலன் காக்கும் சங்கத்தினால் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தரின் சிபாரிசுடன் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைக்காரியாலயத்தில் வைத்து மேற்படி பயனாளிகளுக்கு புத்தாடைகள், ஊட்டச்சத்து பால்மா பொதிகள் என்பன வழங்கப்பட்டன.

## தலைமைத்துவ சபையொன்றின் ஊடாக ஆட்சி நடத்தும் முயற்சியில் அரசாங்கம்

(கொழும்பு)

தலைமைத்துவ சபையொன்றின் ஊடாக ஆட்சி நடத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் எதிர்வரும் 18 மாத கால பகுதிக்கான ஆட்சியை நடத்துவதற்கு தலைமைத்துவ சபையொன்றை நியமிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில்எதிர்வரும்அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் ஆகியன இணைந்து தலைமைத்துவசபையொன்றை நியமித்து அதன் ஊடாக தீர்மானங்களை எடுக்கும் வகையில் இந்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை அமைச்சர்களிடம் நாளை செவ்வாய்க்கிழமை அறிக்கை கோரப்படவுள்ளது.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க இந்த தலைமைத்துவ சபை யோசனையை அண்மையில் அமைச்சரவையில் முன்மொழிந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபை தெரிவு கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக ஆர். வாமதேவன் (வவுனியா), உபதலைவர்களாக ந.ராஜ்மோகன் (பருத்தித்துறை), து.லோகநாதன் (யாழ்ப்பாணம்), செயலாளராக அருள் பிரகாஸ் (யாழ்ப்பாணம்), உபசெயலாளர்களாக கே.சிவாஸ்கரன் (காரைநகர்), அ.அன்ரன்மயூரன் (யாழ்ப்பாணம்), பொருளாளராக எஸ்.டி.எம். நவாஸ் (மன்னார்), தெரிவாகியதுடன் மேலும் 9 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர். (இ-9)

# 25 ஆண்டுகளின் பின்னர் நேற்று முதல் சிவில் போக்குவரத்தில் மட்டு. விமான நிலையம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு விமான நிலையமானது, 25 வருடங்களின் பின்னர் சிவில் விமான சேவைகள் அதிகார சபையிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்நிகழ்வு இடம்பெற்றது.



யுத்த காலத்தில் பல்வேறு அழிவுகளைச் சந்தித்திருந்த குறித்த விமான நிலையம், மீள புனரமைக்கப்பட்டு கடந்த 2016ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்துவைக்கப்பட்டது.

எனினும், உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான செயற்பாட்டு தேவைகளை உறுதிப்படுத்தும் வரை அதன் நடவடிக்கைகள் ஒத்தி வைக்கப்பட்டிருந்தன. தற்போது அவை பூர்த்தி செய் யப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 1,066 மீற்றர் நீளமும் 46 மீற்றர் திறந்த ஓடு பாதையும் கொண்ட மட்டக்களப்பு விமான நிலையத்தில், ஒளியமைப்புடன் கூடிய புதிய ஓடுபாதை மற்றும் பயணிகள் வெளியேறும் பகுதி என்பன புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 1,400 மில்லியன் ரூபாய் செலவில் இவை அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிடுகின்றது.

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தின் போது, இராணுவ மற்றும் விமானப்படையின் நடவடிக்கைகளுக்காக இவ் விமான நிலையம் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெளிநாட்டு நீதிபதிகளை ஜப்பான் நிராகரிக்கின்றதா?

## தூதரகம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கையின் நிலைமாறுகால நீதிப் பொறிமுறை செயற்பாட்டில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கமே தீர்மானிக்க வேண்டுமென இலங்கையிலுள்ள ஜப்பான் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்வாங்கப்படமாட்டார்களென ஜப்பான் தூதுவர் தெரிவித்ததாக, கொழும்பு ஆங்கில நாளிதழொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

குறித்த செய்தியை நிராகரித்து, இலங்கையிலுள்ள ஜப்பான் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த 21ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில், ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுகனுமா கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதன்போது, ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அவர் பதிலளித்திருந்தார். இதன்போது வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்குவது தொடர்பிலும் கேள்வியெழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த ஜப்பான் தூதுவர், வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்குவது தொடர்பாக இலங்கை அரசாங்கமும் மக்களுமே தீர்மானிக்க வேண்டும். இவ்விடயத்தில் ஜப்பான் எவ்வித கருத்தையும் தெரிவிக்க முடியாதென ஜப்பான் தூதுவர் குறிப்பிட்டதாக, ஜப்பான் தூதரகம் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இலங்கையின் முயற்சிகளை ஜப்பான் வரவேற்பதாகவும் இலங்கைக்கு தேவையான சகல உதவிகளையும் வழங்கத் தயாராகவிருப்பதாகவும் ஜப்பான் தூதரகம் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



(கொழும்பு)

பாகிஸ்தான் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் இரவு தாயகம் திரும்பினார்.

கராச்சி நகரிலிருந்து இலங்கை விமான நிலையத்திற்கு உரித்தான யு.எல் 184 எனும் விமானத்தில் இரவு 9.40 மணி அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தினை ஜனாதிபதி வந்தடைந்தார். (இ-7)

# பாகிஸ்தான் உயர் கல்வி அமைச்சருடன் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா சந்திப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் அந்நாட்டு உயர் கல்வி மற்றும் நிபுணத்துவ பயிற்சி அமைச்சர் முஹமத் பாலிஹ் உர் ரஹ்மானை (muhammad baligh ur rehman) சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு நேற்றுக் காலை இடம்பெற்றது.

பாகிஸ்தான் நாட்டின் தேசிய தின விழாவில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் சென்றுள்ளார்.

அத்துடன், இஸ்லாமாபாத் நகரில் அமைந்துள்ள அந்நாட்டு ஜனாதிபதி மாளிகையில் வைத்து மேற்படி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக உள்ள கல்வி ரீதியிலான உறவு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், அதனை வலுப்படுத்துவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை மாணவர்களுக்கு பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் மருத்துவ பட்டப்படிப்புக்கான புலமைப்பரிசில் கோட்டாவை மேலும் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்த இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்,

மருத்துவத்துறை மாத்திரமல்லாது பொறியியல் துறைக்கான புலமைப் பரிசில்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

# தமிழ்-சிங்கள மக்கள் இணைந்து தெற்கில் கலாசார ஊர்வலம்



(கொழும்பு)

மாத்தறை-தெனியாய ஆண்டாரதெனிய சுஹதாராம விஹாரையில் தமிழ் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து நடத்திய ஊர்வலமொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்த ஊர்வலம், தெனியாய 51 சந்தியில் ஆரம்பமாகி சுமார் 7 கிலோமீற்றர் தூரம் வரையிலான ஆண்டாரதெனியாய விஹாரை வரை இடம்பெற்றது. இதில் தமிழ் மற்றும் சிங்கள கலாசார நடனங்கள் இடம்பெற்றதோடு சிறுவர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (இ-7)

# கோர விபத்தில் இளைஞர் மூவர் பலி!

(கொழும்பு)

மாதம்பே குளியாப்பிட்டிய பகுதியில் உடுபத்தாவ - தும் மலசூரிய பிரதேசத்தில் இடம் பெற்ற கோர விபத்தில் இளைஞர்கள் மூவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்கள் மூவரும் மோட்டார் சைக்கிளில் ஒருவரை ஒருவர் முந்திச் செல்ல முற்பட்ட வேளையிலேயே, குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 18 வயது மற்றும் 19 வயதுடைய இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தானது நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)




# முயல் கறி

**24.03.2018**


**தொடர்ச்சி...**

அப்பா முயலும் என்னோட குட்டி சொல்றது தான் சரி. நாங்களும் வர்றோம் என்று சொன்னது.

முயல் குட்டிகளின் கண்ணீரும், குட்டிகள் மீது பெரிய முயல்களுக்கும் உள்ள அன்பையும் கண்டு விவசாயி திகைத்துப் போனார்.

"சே! என்ன காரியம் பண்ண இருந்தோம். சாப்பிடும் வரைதான் ருசியான சமாச்சாரம் நமக்கு. ஆனால் முயல்களுக்கோ தங்கள் குடும்பத்திலிருந்து ஒருவரை நிரந்தரமாக இழந்து தவிக்கும் உணர்வு எப்போதும் ஏற்பட்டு விடுமே. விவசாயி மனம் மாறினார். அம்மா முயலை கீழே இறக்கி விட்டார்.

இனிமேல் இது போன்று உயிர்களைக் கொன்று புசிக்கும் வழக்கம் இன்றோடு சரி என்றும் முடிவு செய்துகொண்டார். முயல்கள் எல்லாம் தங்கள் கைகளைக் கூப்பி விவசாயிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டது.



முயல் குடும்பம் சந்தோசமாக வீட்டுக்குத் திரும்பியது. சீமாவும் பூமாவும் அப்பா, அம்மா பேச்சைக் கேட்காமல் போய்த்தானே வம்பில் மாட்டிக் கொண்டோம். இனிமேல் அப்பா, அம்மா சொல்வதைத் தட்டாமல் கேட்க வேண்டும் என்று தீர்மானித்தது. அப்பா,அம்மாவிடம் சீமாவும் பூமாவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது.

**கதை சொல்லும் நீதி :- மாணவத் தம்பி, தங்கைகளே இந்த முயல் குட்டி கதையிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? அப்பா, அம்மா என்பவர்கள் உங்களைப்போல வாழ்ந்து பெரியவர்கள் ஆனவர்கள். அவர்களுக்கு எது நல்லது? எது கெட்டது என்று தெரியும்.**

**அவர்கள் சொல்படி கேட்டு நடந்தால் எந்தப் பிரச்சினையும் நமக்கு வராது என்பதைத் தெரிந்து கொண்டீர்களா? பிள்ளைகளுக்கு ஒன்று என்றால் பெற்றோர் எப்படித் துடித்துப் போவார்கள்? நல்ல பிள்ளைகள் தான் நல்ல மனிதர்களாக முடியும்.**

**இது மட்டுமா? அந்த விவசாயியை அசைவம் சாப்பிடுவதிலிருந்தே மாற்றியமைத்தது எது? என்பதையும் சிந்தியுங்கள்!**

**முற்றும்.**

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2018
26

- 1199 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும்போது படுகாயமடைந்தான். 11 நாட்களின் பின்னர் இவன் இறந்தான்.
- 1431- பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.
- 1871-இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 2,405,287 பேர் பதிவாகினர்.
- 1872- கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.
- 1934-ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1942-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் முதற்தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாயினர்.
- 1953-ஜொனாஸ் சால்க் தனது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.
- 1958-ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவினர்.
- 1979-இஸ்ரேல்-எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷிங்டனில் கைச்சாத்தானது.
- 1998-அல்ஜீரியாவில் 2 அகவைக்குட்பட்ட 32 குழந்தைகள் உட்பட 52 பேர் கத்திகளாலும் வாள்களாலும் வெட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006-மியன்மாரின் புதிய தலைநகராக நாய்பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.
- 2000-விளாடிமீர் புடின் ரஷ்யாவின் அரசுத்தலைவராக தெரிவானார்.
- 2005-தமிழீழ தேசிய தொலைக்காட்சி கிளிநொச்சியில் ஆரம்பம்.
- 2006-முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.
- 2007-கொழும்பில் கட்டுநாயக்க விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

**பிறப்புகள்**

- 1874-இராபர்ட் புரொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (இ. 1963)
- 1910-க.வி.தேவநாயகம், இலங்கை அரசியல்வாதி (இ. 2002)
- 1913-பால் ஏர்டோசு, அங்கேரிய-போலந்து கணிதவியலாளர் (இ. 1996)
- 1926-தா. சிவசிதம்பரம், இலங்கை அரசியல்வாதி (இ. 1992)
- 1933-டின்டோ பிராஸ், இத்தாலிய இயக்குநர்
- 1940-நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி
- 1941-விளாடிமிர் அலெக்சியெவிச் பெலின்சுகி, உருசியக் கோட்பாட்டு இயற்பியலாளர்
- 1941-ரிச்சர்ட் டாக்கின்சு, கென்ய-ஆங்கிலேய உயிரியலாளர்
- 1953-ஜான்சன், மலையாள இசையமைப்பாளர் (இ. 2011)
- 1965-பிரகாஷ் ராஜ், தென்னிந்தியத் திரைப்பட நடிகர், இயக்குநர்
- 1973-லாரி பேஜ், கூகுள் நிறுவனத்தை ஆரம்பித்த அமெரிக்கர்

**இறப்புகள்**

- 1326-அலெஸ்சாண்டிரா கிலியானி, இத்தாலிய உடலியலாளர், மனித உடற்கூற்றியலாளர் (பி. 1307)
- 1827-லூடுவிக் வான் பேத்தோவன், செருமானிய செவ்வியலிசையமைப்பாளர் (பி. 1770)
- 1923-சாரா பேர்ண்ஹார்ட், பிரான்சிய நடிகை (பி. 1844)
- 1977-டி.வி.தாமஸ், இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி. 1910)
- 2013-சுகுமாரி, தென்னிந்திய திரைப்பட நடிகை (பி. 1940)

**சிறப்பு நாள்**

- மாவீரர் நாள் (மாலி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 45 | 70 | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 70 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 30 | 20 | 30 | 40 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 25 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 30 | 30 | 30 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 80 | 100 | 80 | 140 | 70 |
| பூசணி | 30 | 35 | 50 | 40 | 40 | 50 |
| புடோல் | 70 | 30 | 80 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 | 60 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 150 | 80 | 100 | 120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 55 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 110 | 160 | 140 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 80 | 80 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | — | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 120 | 80 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 160 | 110 | 200 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 60 | 50 | 40 | 50 |
| கறிமிளகாய் | 60 | 30 | 80 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 400 | 600 | 500 |
| போஞ்சி | 160 | 60 | 120 | 80 | 160 | 100 |
| கத்தரிதம்புள்ளா | 30 | — | 50 | 60 | 60 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 40 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 130 | 100 | 100 | 80 | 120 | 80 |
| தேங்காய்(ஒன்று) | 100 | 30-90 | 80 | 90 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 130 | 200 | 150 | 200 | 150 |
| வெங்காயப்பூ | — | -- | -- | 120 | 160 | 150 |
| முள்ளங்கி | — | 25 | 40 | 60 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 40 | 30 | 50 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 40 | — | 60 | 150 | 80 | 80 |

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்... ~ பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தெற்கிலும் வடக்கிலும் குருசேத்திரப் போர்

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருசேத்திரத்தில் போர் நடைபெற்றது.

18 நாட்கள் நடைபெற்ற போரில் பாண்டவர்கள் வெற்றி பெற்றனர்.

குருசேத்திரப் போரிலேயே கீதோபதேசம் இடம்பெற்றது. கிருஷ்ணபரமாத்மா போர்க்களத்தில் வைத்து அருச்சுனனுக்குச் செய்த இவ் உபதேசமே பகவத்கீதை ஆகும்.

... எதை நீ கொண்டு வந்தாய் இழப்பதற்கு. இன்று உன்னுடையது நாளை இன்னொருவருடையதாகிறது... என்பதாக பகவத்கீதை பகர்கிறது.

யுத்தத்தை நடத்தி தர்மத்தை நிலைநிறுத்துவதற்கான உபதேசமே அது. சுருங்கக்கூறின் போர்க்களத்தில் மனச்சோர்வுற்றிருந்த அருச்சுனனை கிருஷ்ணபரமாத்மா ஆற்றுப்படுத்துகிறார்.

இந்தக் காலத்தில் கவுன்சிலிங் என்று நாம் கூறுவதையே அன்று குருசேத்திரத்தில் கிருஷ்ண பரமாத்மா செய்தார்.

இறைபரம்பொருளின் கவுன்சிலிங் என்பதால் கீதோபதேசம் உலக மக்கள் அனைவரையும் ஆற்றுப்படுத்தும் மகா தத்துவமாக விளங்குகிறது.

இவை ஒருபுறம் இருக்க, வடக்கிலும் தெற்கிலும் அரசியல் குருசேத்திரப் போர் ஆரம்பமாகவுள்ளது.

இன்று யாழ்ப்பாண மாநகர சபைக்கான முதல்வர் தெரிவோடு வடக்குக்கான குருசேத்திரம் தொடங்க; பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்வரும் 4ஆம் திகதி கொண்டு வருவதனூடு தெற்கில் குருசேத்திரம் ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாண மாநகர சபைக்கான முதல்வர் தெரிவில் யார் வெற்றியீட்டினாலும் அவர் நிம்மதியாகத் தனது பணியைச் செய்ய முடியாது என்பது திடமான உண்மை.

ஆக, வடக்கில் யாழ்ப்பாண மாநகர சபை என்ற உள்ளூராட்சி அமைப்பு அனைவரது எதிர்பார்ப்புக்குமுரியது என்ற அடிப்படையில்,

வடக்குக்கான குருசேத்திரப் போரின் அடையாளமாக யாழ்ப்பாண மாநகர சபை இருக்கும் என்று கூறலாம்.

அதேநேரம் தெற்கில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வெற்றி பெறுவாரா என்பது இன்னமும் உறுதியாகவில்லை.

சுருங்கக்கூறின் குருசேத்திரத்தில் விழுப்புண்பட்டு வீழ்ந்து கிடக்கும் கர்ணனின் நிலைமையிலேயே பிரதமர் ரணில் உள்ளார்.

உதிரிக் கட்சியினர் சேர்ந்து பிரதமர் ரணிலைக் காப்பாற்றுவரா? அல்லது கர்ணனின் புண்ணியத்தை எடுத்ததுபோல, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருபவர்களுடன் சேர்ந்து ரணில் விக்கிரமசிங்கவை வெளியேற்றுவரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

**யார் வென்றால் என்ன? யார் தோற்றால் என்ன? தெற்கினதும் வடக்கினதும் எதிர்கால அரசியல் என்பது குருசேத்திரப் போராகவே இருக்கப் போகிறது.**

# ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகளின் எதிர்காலத்தை காத்து உதவுக

## அமைச்சர் அமீர் அலி கோரிக்கை

(கொழும்பு)

தாயை இழந்த துயரத்தில் வாழும் ஆனந்த சுதாகரனின் குழந்தைகளின் நலனில் அக்கறை செலுத்தி சிறையிலுள்ள ஆனந்த சுதாகரனை மனிதாபிமான அடிப்படையில் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர் அமீர் அலி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பிரதி அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த யுத்த காலத்தின் போது அரசுக்கெதிராக ஆயுதம் தூக்கிப் போராடியவர்கள் மாத்திரமின்றி அப்பாவித் தமிழர்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

திட்டமிட்டு தவறு செய்தவர்களும் எதுவுமே அறியாமல் தப்பு செய்தவர்களும் இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் தற்போதும் வாடுகின்றனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனும் சிறையில் வாடுகின்றார். அவரது மனைவியும் தற்போது இறந்துவிட்ட நிலையில் எதுவும் அறியாத அவரது ஆண் பிள்ளையும் பெண் பிள்ளையும் தாயும் தந்தையுமின்றி தவிக்கின்றனர்.

எனவே ஆனந்த சுதாகரனின் இரு பிள்ளைகளும் தாய் தந்தையின் அரவணைப்பு இல்லாமல் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிப்படையும் சூழ்நிலை காணப்படும் நிலையிலும் பிள்ளைகளது மனநிலை பாதிப்படையாத வகையிலும் அரசு ஆனந்த சுதாகரனுக்கு பொதுமன்னிப்பு வழங்கி பிள்ளைகளின் எதிர்காலத்தை காக்க உதவுமாறு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்வதாக தெரிவித்துள்ளார். (மு-1)

# ஐ.தே.க உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை – வஜிர தெரிவிப்பு

காலி மாநகர சபையின் முதல்வர் தெரிவின் போது பொதுஜன முன்னணியின் முதல்வர் வேட்பாளரை வெற்றி பெறச் செய்யும் வகையில் வாக்களித்த ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அமைச்சர் வஜிர அபேவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த முறை இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் காலி மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றியது.

எனினும் மாநகர முதல்வர் தெரிவின்போது ஐக்கிய தேசிய கட்சியின் 7 உறுப்பினர்கள் பொதுஜன முன்னணியின் வேட்பாளருக்கு ஆதரவளிக்க, காலி மாநகர சபை பொதுஜன முன்னணி வசமானமை குறிப்பிடத்தக்கது. (மு)

# கட்சியின் தலைமைக்கு கட்டுப்படாவிட்டால் கட்சியிலிருந்து நீக்க வேண்டும் – மகிந்த கண்டிப்பு

கட்சியின் சகல உறுப்பினர்களும கட்சியின்தலைமை எடுக்கும் தீர்மானங்களுக்கு கட்டுப்பட வேண்டும் எனவும் அவ்வாறு கட்டுப்படாவிட்டால் கட்சியில் இருந்து நீக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க – சீதுவ நகர சபைக்கு தெரிவான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவர் கட்சியின் தீர்மானத்திற்கு கட்டுப்படாத காரணத்தினால், நகர சபையின் அதிகாரம், பொதுஜன பெரமுனவின் கைவிட்டு சென்றதாக கிடைத்த முறைபாடு தொடர்பாக கருத்து வெளியிடும்போதே முன்னாள் ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சட்டத்தரணிகளை அழைத்துள்ள மகிந்த ராஜபக்ஷ, சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு எதிராக கட்சியின் யாப்புக்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறும் கட்டுப்பாட்டை மீறியமை தொடர்பில் விளக்கம் கோருமாறும், கட்டுப்பாட்டை மீறியிருந்தால், கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் அறிவித்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் தமது எண்ணத்திற்கு அமைய செயற்பட வேண்டுமாயின் கட்சிக்கு தலைமைத்துவம் தேவையில்லை எனவும் சுதந்திரமாக செயற்பட விரும்புவோர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு செல்லலாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி சிரித்தவாறு கூறியதாகவும் தகவல்கள் கூறுகின்றன. (மு-1)

# தங்க பாளங்களுடன் ஒருவர் கைது

6 லட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான தங்க பாளங்களை சட்டவிரோதமாக இந்தியாவுக்கு கொண்டு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் சென்னைக்கு செல்ல முற்பட்ட வேளையில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன்போது, பயணப்பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தங்க பாளங்கள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் புறக்கோட்டையைச் சேர்ந்த 40 வயதானவர் என தெரிய வந்துள்ளது. (மு-1)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில பொற்கோவில் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில பறயலானங்குளம், மடுச்சந்தி, மல்லவராயர் கட்டையடம்பன், கட்டையடம்பன், தம்பனைக்குளம், பண்ணைவெட்டுவான், பண்ணைவெட்டுவான் தொழில்நுட்பக் கல்லூரி, இசைமலைத்தாழ்வு, கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம், மாதர் கிராமம், பெரிய குஞ்சுக்குளம், பெரிய முறிப்பு ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**துளசி மாடத்தை எங்கே வைக்கவேண்டும்?**

கிழக்கு பள்ளத்தில் துளசி மாடம்: பொன் நலம்

தெற்கில் துளசி: பெண்களுக்கு மகிழ்ச்சி


மேற்கில் துளசி: ஆரோக்கியம் பெருகும்

வடக்கே உயரத்தில் துளசி: வீழ்ச்சி

(தொடரும்)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## வாழ்க்கைத் தத்துவம்




வாழ்க்கையை விளங்கிக் கொண்டு, காரணத்தையும் உணர்ந்து கொண்டு நடத்தினால் அது வெள்ளத்தில் படகு விடுவதை ஒக்கும். மாறாக அவ்விளக்கம் இல்லாமல் நடத்தினால் அது வெள்ளத்தில் அகப்பட்ட துரும்பின் நிலையேயாகும்.

வாழ்க்கையோ இயற்கை, சமுதாயம், தான் என்ற மூன்றின் இணைப்பில் நடைபெறுகிறது. இவற்றில் சமுதாயம் என்ற தத்துவத்தை ஆராய்வதே நாம் இப்போது எடுத்துக் கொண்டுள்ள வாழ்க்கைத் தத்துவ ஆராய்ச்சியாகும்.

வாழ்க்கை வெற்றிபிக்கதாக அமைய வேண்டுமாயின், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து, மதித்து வாழ வேண்டும். அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோமோ, அந்த நோக்கத்திற்கு ஒத்ததாக அதாவது பிறவித் தொடரை முடித்துக் கொண்டு வீடுபேறு எய்த வேண்டும் என்ற அந்த உயரிய நோக்கத்திற்கு ஒத்ததாக வாழும்முறை அமைய வேண்டும். அப்போது தான் துன்பத்தைத் தோற்றுவித்துக் கொள்ளாமலும் வாழலாம். தவறுதலாக நாம் தோற்றுவித்துக் கொள்ளும் துன்பத்திலிருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோன்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மை நாம் காத்துக் கொள்ளலாம். எனவே, வாழ்க்கையின் தத்துவத்தைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்று அதன்படியே வாழ்ந்து வரவேண்டும்.

# "வடமராட்சியின் சிறந்தவன்" தொடர் சம்பியன் பட்டம் வென்றது பலாலி விண்மீன்





எஸ்.டேமியன் மற்றும் காண்டீபனின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க, தாங்கள் தான் வடமராட்சியின் சிறந்தவன் என பலாலி விண்மீன் அணி நிரூபித்தது.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில், வடமராட்சியின் சிறந்தவன் என்ற தொனிப்பொருளில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது.

இதில் மொத்தமாக 40 அணிகள் பங்குபற்றியிருந்தன. முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்று, அதிலிருந்து 8 அணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றுக்கிடையில் லீக் முறையில் ஆட்டங்கள் இடம்பெற்றன.

அந்தவகையில் நவிண்டில் கலைமதி ஏ, கரணவாய் கொலின்ஸ், அண்ணாசிலையடி இளைஞர், வதிரி டயமன்ஸ், நவிண்டில் கலைமதி பி, கம்பர்மலை யங்கம்பன்ஸ், பலாலி விண்மீன் மற்றும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் ஏ அணி ஆகிய 8 அணிகளும் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றிருந்தன.

தொடர்ந்து நடைபெற்ற சுப்பர் - 8 அணிகளுக்கிடையிலான ஆட்டங்களிலிருந்து, நவிண்டில் கலைமதி, பலாலி விண்மீன், வதிரி டயமன்ஸ் மற்றும் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றன.

அரையிறுதியில் கலைமதி அணி, யங்கம்பன்ஸ் அணியையும், பலாலி விண்மீன் அணி வதிரி டயமன்ஸ் அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தன.

இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெற்றது. முதற்பாதியாட்டத்தில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் பதிவுசெய்யவில்லை. இரண்டாம் பாதியாட்டத்தில் விண்மீன் அணியின் காண்டீபன் முதலாவது கோலைப் பதிவு செய்தார். அந்தக் கோல் இறுதிவரையில் நீடிக்க, பலாலி விண்மீன் அணி, 01:00 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக விண்மீன் அணியின் நட்சத்திர வீரர் எஸ்.டேமியன் தெரிவு செய்யப்பட்டதுடன், தொடர்நாயனாக கலைமதி அணியின் தேவராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும், கலைமதி அணியின் சத்தியசீலன் சிறந்த பின்கள வீரராகவும், விண்மீன் அணியின் கோல் காப்பாளர் றெடின் சிறந்த கோல் காப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். (26)



கிளிநொச்சி கரைச்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட கழகங்களிடையே நடத்தப்பட்ட 2018ம் ஆண்டுக்கான விளையாட்டு போட்டிகளில் அதி கூடிய புள்ளிகளைப்பெற்று கரைச்சி பிரதேசத்தில் சிறந்த விளை யாட்டுக்கழகமாக மாவடி அம்மன் கிராமசேவகர் பிரிவின் குறிஞ்சி விளையாட்டுக்கழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வு கடந்த வியாழக்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதான த்தில் பிற்பகல் 1:30 மணிக்கு நடைபெற்ற இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் வை. முகுந்தன் ஆகியோரும் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர். (க-277)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியில் அணிக்கு 9 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை கால்பந்தாட்ட அணிகளிடமிருந்து நவஜீவன்ஸ் அணி கோரியுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள், எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்பியனாகும் அணிக்கு 60 ஆயிரம் ரூபாயும், இரண்டாமிடம் பெற்ற அணிக்கு 40 ஆயிரம் ரூபாயும், 3 ஆம் இடம்பெற்ற அணிக்கு 20 ஆயிரம் ரூபாயும், நான்காமிடம் பெற்ற அணிக்கு 10 ஆயிரம் ரூபாயும் பரிசில் வழங்கப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-26)

# கட்டைக்காடு சென்.மேரிஸின் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி

கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி பருத்தித்துறை லீக் மற்றும் உபலீக்கான வடமராட்சி லீக் ஆகியவற்றின் அனுசரணையில் வடமாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள், எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னதாக தங்கள் விண்ணப்பங்களை, 077 539 7159, 077 557 9221 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

சம்பியனாகும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணமும், இரண்டாமிடம் பெறும் அணிக்கு 30 ஆயிரம் ரூபாய் பணப்பரிசிலும் வெற்றிக் கிண்ணமும், மூன்றாமிடம் பெறும் அணிக்கு 15 ஆயிரம் ரூபாய் பணப் பரிசிலும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க-26)

# கலைவாணி கால்பந்தாட்டத் தொடர் ஊரெழு றோயல் மூன்றாமிடம்

கலைவாணி விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின்3 ஆம்இடத்தை ஊரெழு றோயல் அணி பெற்றுக் கொண்டது.

நாவாந்துறைகலைவாணிவிளையாட்டுக்கழகம், யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தியது. இந்தச் சுற்றுப்போட்டியில் 32 அணிகள் பங்குபற்றின. அணிகள் ஏ, பி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு முதற்சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் இடம்பெற்றன. ஒவ்வொரு பிரிவிலிருந்து 4 அணிகள் வீதம், 8 அணிகள் சுப்பர்- 8 லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

ஏ பிரிவில் இருந்து குருநகர் பாடும்மீன், திக்கம் இளைஞர்கள், மயிலங்காடு ஞானமுருகன் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் அணிகளும் பி பிரிவில் இருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ், ஊரெழு றோயல், பலாலி விண்மீன் மற்றும் துறையூர் ஐயனார் ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

இந்த 8 அணிகளுக்கிடையில் சுப்பர் - 8 ஆட்டங்கள் லீக் முறையில் இடம்பெற்றன. இதிலிருந்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ், மயிலங்காடு ஞானமுருகன், இளவாலை யங்ஹென்றிஸ் மற்றும் ஊரெழு றோயல் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

## சென்.நீக்கிலஸ் அணி வெற்றி

22 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்ற முதலாவது அரையிறுதியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணி மோதியது.

முதற்பாதியாட்டத்தில் சென். நீக்கிலஸ் அணியின் அமிலன் இரண்டு கோல்களைப் போட்டார். பதிலுக்கு ஞானமுருகன் அணியின் வாகீசன் கோல் ஒன்றைப் போட்டார். முதற்பாதியாட்டத்தில் சென்.நீக்கிலஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் ஞானமுருகன் அணியின் வாகீசன் மேலும் ஒரு கோலை அடித்து, கோல் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினார். ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. சமநிலை தவிர்ப்பு உதையும் சமநிலையில் முடிவடைந்தது. இதனால்நாணயச்சுழற்சியின்மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டார். இதில் சென்.நீக்கிலஸ் அணி வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

## யங்ஹென்றிஸ் அணி வெற்றி

இரண்டாவது அரையிறுதியாட்டம் 24 ஆம் திகதி இளவாலை யங்ஹென்றிஸ் அணிக்கும் ஊரெழு றோயல் அணிக்கும் இடையில் இடம்பெற்றது. முதற்பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணி இரண்டு கோல்களை அடுத்தடுத்து போட்டது. ஞானரூபன், தனேஸ் கோல்களைப் போட்டனர். முதற்பாதியாட்டத்தில் யங்ஹென்றிஸ் அணி 2:0 என முன்னிலை வகித்தது.

எனினும், இரண்டாவது பாதியாட்டத்தில் றோயல் அணியின், கஜகோபனின் அதிரடியால் அசரவைக்கும் இரண்டு கோல்களைப் போட்டது. போட்டிநேரத்தில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன. வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதுவும் 5:5 என சமநிலையில் முடிவடைந்தது. தொடர்ந்து நாணயச் சுழற்சியின் மூலம் வெற்றியாளர் தீர்மானிக்கப்பட்டார். இதில் யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.

## மூன்றாமிடத்தைப் பெற்ற ஊரெழு றோயல்

24 ஆம் திகதி நடைபெற்ற 3 ஆம் இடத்துக்கான போட்டியில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது. இதில் றோயல் அணி, 06:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (க-26)

## வெட்டுக் காயத்...

தனது வீட்டில் இருந்து பருத்தித்துறை நகருக்கு வந்த போது, சிவில் உடையில் நின்ற பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் ஒருவர் தன்னைத் துரத்தியதாகவும் தான் ஓடிவிட்டதாகவும் பின்னர் கலட்டி பகுதியால் நடந்து வந்து கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த மேற்படி பொலிஸ் தன்னிடம் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து குத்தியதாக வும் அதன்போது தான் அதை தடுத்தபோது கைப்பகுதியில் வெட்டு விழுந்ததாகவும் எமது செய்தியாளர்களிடம் நடந்தவற்றை கூறினார்.

வெட்டியதன் பின்னர் பருத்தித்துறை பொலிஸில் முறையிடச் சென்றபோது, முறைப்பாட்டை பருத்தித்துறைப் பொலிஸார் ஏற்க மறுத்ததாகவும் பின்னர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் நேரடியாகச் சென்று முறையிட்டதையடுத்தே பொலிஸார் முறைப்பாட்டை பதிவு செய்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (மு-60)

## அஸ்கிரிய பீடத்...

கையளித்துள்ளார்.

சிறைக்கைதியான ஆனந்த சுதாகரனின் மனைவி நோய்வாய்ப்பட்ட நிலையில் அண்மையில் மரணமடைந்தார்.

இதனால் அவருடைய இரண்டு பிள்ளைகளும் தாய் இல்லாமலும் தந்தை இருந்தும் இல்லாத நிலையில் காணப்படுகின்றனர்.

இந்த நிலையில் அவர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அவர்களின் தந்தையின் விடுதலை அவசியமாகவுள்ள நிலையில் ஆனந்த சுதாகரனை பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதற்கு ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யுமாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஆராய்ந்த தேரர் அவரின் விடுதலைக்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாக வேலாயுதம் கணேஸ்வரனிடம் உறுதியளித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் ஆனந்த சுதாகரனின் விடுதலையை வேண்டி கையெழுத்து போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## யாழ்.முட்டாஸ்...

கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று மாலை 7.30 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் குறித்த கடைமீது பெற்றோல் குண்டு தாக்குதல் மற்றும் கற்களை வீசி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதனால் குறித்த கடையின் கண்ணாடிகள் நொறுங்கியுள்ளதுடன் பெற்றோல் குண்டு வெடித்தனால் கடையின் முன்பக்கம் சிறிதளவு சேதமடைந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற கொண்டுள்ளனர். (மு-9)

## க.பொ.த சா/த...

"இம்முறை முதற் தடவையாக வலய கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்தப் பெறுபேறுகள் இறுவெட்டு மூலம் வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரீட்சைப் பெறுபேறுகள் 28ஆம் திகதி புதன்கிழமை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சேர்க்கப்படும். மறுதினம் கொழும்பில் உள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும். ஏனைய பாடசாலைகளுக்கு தபாலில் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என்று பரீட்சைகள் ஆணையாளர் பி.சனத் பூஜித மேலும் தெரிவித்தார்.

கடந்த வருடம் இடம்பெற்ற இந்தப் பரீட்சைக்கு 6 இலட்சத்து 88 ஆயிரம் பேர் தோற்றியிருந்தனர். ஆகக்கூடிய மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## துப்பாக்கிச் சூட்டில்...

பாக்கிப் பிரயோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 46 வயதுடைய ஆணொருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-1)

## அநாவசிய அழுத்...

த்து இணைந்து பயணிக்கும் செயற்பாட்டில் அநாவசிய அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டாம் என அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

எஞ்சியுள்ள காலத்திலும் பொறுப்புக்களை நிறைவேற்றுவோம் எனவும் அரச தரப்பு தெரிவித்துள்ளது.

நல்லிணக்கத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் அரசாங்கத்தின் மந்தகதி போக்கினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் கண்டித்துள்ள நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அரசாங்கத்தை கடுமையாக சாடி வருகின்றது.

இந்நிலையில் அரசாங்கம் எவ்வாறான நகர்வுகளை கையாளவுள்ளது என வினவியபோதே அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைக் குறிப்பிட்டார். (மு-1)

## இன்று மகிழ்ச்சி...

அவரை ஒரு சாதாரண வாழ்க்கையை நடத்த அனுமதித்தோம்.

கே.பியின் புனர்வாழ்வு ஒரு பெரிய விடயம். அதனை நாங்கள் இன்னும் நம்புகிறோம் என்று முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் தனக்கு நம்பிக்கை இருக்கவில்லை என்றும், அது நேரத்தை வீணடிக்கும் செயல் என்றுதான் கருதினேன்.

போர் முடிவுக்கு வருவதற்கு முன்னர், விடுதலைப் புலிகளுடன் கடைசி நேரப் பேச்சுக்கள் ஏதாவது இடம்பெற்றதா?, புலிகளின் தலைவர் பிரபாகரனை அது சென்றடைந்ததா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு அவர், "விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதில் நான் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அது நேரத்தை வீணடிக்கின்ற செயல் என்று இப்போதும் கருதுகிறேன்.

பிரபாகரனை ஒரு புத்திசாலி என்று நான் கூறமாட்டேன். ஆனால் கே.பி இவ்வாறில்லை என்றார் கோத்தபாய.

இதேவேளை இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் இலங்கை குறித்து போதிய தெளிவின்றி தவறான முடிவுகளை மேற்கொண்டுள்ளதாகவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இந்தியாவை மீறி சீனாவுடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டதாக கடந்த காலத்தில் இந்தியா கருதி வந்தது.

அத்துடன், இலங்கை நிலப்பரப்பை இந்தியாவிற்கு எதிராக பயன்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் இடமளித்து வருவதாக இந்திய பாதுகாப்பு தரப்பினர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தனர்.

ராஜதந்திர உறவுகள் என்பது நம்பிக்கை அடிப்படையில் கட்டி எழுப்பப்படுவதாக தெரிவித்த அவர், இலங்கையுடனான ராஜதந்திர தொடர்புகளின்போது, சீனா குறித்த அச்சத்தை துறந்து இந்தியா செயல்பட வேண்டும் என கோத்தபாய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (மு-1)

## யாழ்.மேயர் யார்?...

வந்த நிலையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தாம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி ஆனோல்ட்டை முதல்வர் வேட்பாளராக தெரிவு செய்வதாக அறுதியாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று ஏனைய கட்சி மட்டங்களுடனும் கட்சி தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் சமரச பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இன்று நடைபெறவுள்ள வாக்கெடுப்பின் பின்னர் பலருடைய எதிர்பார்ப்பின் மத்தியில் முதல்வர், பிரதி முதல்வர் தெரிவு இடம்பெறவுள்ளது.

யாழ் மாநகர சபை 9 மணிக்கும் சாவகச்சேரி நகர சபை பி.ப 3 மணிக்கும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (மு-9)

# கலை இலக்கியங்கள் ஒரு இனத்தின் அடையாளங்களை பிரதிபலிக்கக்கூடியது

## முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கலை இலக்கியங்கள் ஆரோக்கியமான சமுதாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதாக அமைந்துள்ளதுடன் இது ஒரு இனத்தின் அடையாளங்களை பிரதிபலிக்கக் கூடிய கண்ணாடியாகவும் விளங்குகின்றது என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கலை பண்பாட்டு விழுமியங்கள் வளர்ச்சி பெற வேண்டுமாயின் சமுதாயம் ஆரோக்கியமான ஒரு நிலைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் 2017ஆம் ஆண்டிற்குரிய முதலமைச்சர் விருது வழங்கும் விழா நேற்று நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றுகையில்,

கலை இலக்கியங்கள் ஆரோக்கியமான சமுதாயத்திற்கு மிகவும் அத்தியாவசியமானதாக அமைந்துள்ளதுடன் இது ஒரு இனத்தின் அடையாளங்களை பிரதிபலிக்கக் கூடிய கண்ணாடியாகவும் விளங்குகின்றது.

எனவே இத்தகைய கலை பண்பாட்டு விழுமியங்கள் வளர்ச்சி பெற வேண்டுமாயின் சமுதாயம் ஆரோக்கியமான ஒரு நிலைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போதுதான் கலைப்படைப்புக்களும் ஆரோக்கியமானதாக அமைய முடியும்.

அந்த வகையில் கலை பண்பாட்டு பாரம்பரிய வளர்ச்சிக்கும் அதன் பேணுகைக்கும் ஆணி வேராக செயற்படக்கூடிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களின் படைப்புக்கள் போற்றப்படுவதுடன் அவர்களின் சேவைகள் தொடர்ந்து எமது மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் வாய்ப்புக்களையும் சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது எமது கடப்பாடாகும்.

கலையும் கலைஞனும் எப்போதும் வறுமையில் இருந்ததாகவே பழைய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. அதனால் தானோ என்னவோ "சேர்ந்தே இருப்பது கலையும் பிணியும்" என்கின்றார்கள்.

ஆனால் தற்காலக் கலைஞர்கள் அவ்வாறல்ல. பலர் செல்வ மிகுதியுடன் சிறப்பான வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்த ஒரு உண்மையான படைப்பாளியும் உருவாக்குகின்ற படைப்புக்கள் வறுமையைத் துடைப்பதற்காக உருவாக்கப்படுவதில்லை.

முகையொன்று மலர்வது போல் கலைஞர்களின் அந்தரங்க வெளிப்பாடுகளே படைப்புக்கள். ஆனால் அவர்களின் படைப்புக்கள் மெருகேற்றப்பட்டு சிறந்தவையாக அமைகின்றபோது அவற்றிற்குரிய அங்கீகாரமும் அந்தஸ்தும் காலம் கடந்தே கிடைக்கின்றன.

எனினும் துன்பச் சூழல்களில் வாழுகின்ற படைப்பாளிகளும் அவர்களின் புடம் போடப்பட்ட படைப்புக்களும் போற்றப்பட வேண்டியவை. பொக்கிஷமாக வைத்து பேணப்பட வேண்டியவை.

பல்வேறுபட்ட படைப்புக்களும் படைப்பாளிகளும் எம்மிடையே காணப்பட்ட போதும் அவர்களின் வாழ்வு இலைமறை காயாகவே இருந்து வந்துள்ளன.

அவர்களின் படைப்புக்கள் மக்களின் கைகளுக்கு கிட்டாமலே சென்ற வரலாறுகள் பல. எனினும் இவ்வாறான படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை பொதுமக்களுக்கு அறிமுகம் செய்வதற்கும் அவர்களின் படைப்புக்களை மக்களின் கைகளில் தவழச் செய்வதற்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கின்ற ஆக்கபூர்வமான செயற்பாடுகள் இத்தருணத்தில் பெருமையுடன் நினைவு கூரப்படலாம்.

இன்றைய இளைய தலைமுறையினரில் கூடுதலானவர்கள் இலக்கிய உணர்வு குன்றியவர்களாகவும் கலை நயம் குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். அவர்கள் நவீன இலத்திரனியல் யுகத்தில் இலத்திரனியல் கருவிகளுடன் கூடிய நாட்டங்களை கொண்டிருக்கின்ற காரணத்தினால் இயற்கையின எழில் கொஞ்சும் வனப்பையும அதன் ஆரோக்கிய சூழ்நிலையையும் அறிய மாட்டாதவர்களாக வேறொரு செயற்கைப் பரிமாணத்தில் சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

விஞ்ஞானம் எவ்வளவு தூரம் வளர்ச்சி பெறுகின்ற போதும் இயற்கையின் வனப்பும் இயற்கை எமக்குத் தரும் கொடைகளையும் இரசிக்கக் கூடிய வகையில் இளைய சமுதாயம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இலகு தமிழ்ப் பாவனை என்ற பெயரில் மொழியைச் சீரழிக்கும செயற்பாடுகள் கண்டிப்பிற்குரியன.

இன்றைய தொடர்பாடல் சாதனங்கள் தமிழ்மொழியின் இலக்கியச் சுவையை உணர முடியாதவாறு மழுங்கடிக்கின்ற செயற்பாடுகளில் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுவது வேதனைக்குரியது.

இது ஒருவேளை பழமைக்கும் புதியனவற்றிற்கும் இடையில் இருக்கும் இடைவெளியை எடுத்துக் காட்டுவதாக அமையலாம். ஆனால் இயற்கை இயற்கைதான். செயற்கை செயற்கைதான். இதை எங்கள் இளைய சமுதாயம் உணர வேண்டும்.

முதன்மைக் கலைஞர்களின் படைப்புக்கள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். அவற்றில் சிறந்த படைப்புக்கள் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் சீர்தூக்கிப் பார்க்கப்பட்டு அவை இளைய தலைமுறையினரின் பாவனைக்கு ஏற்றதாக காணப்படின அவை அச்சு வாகனமேற்றி நூல் வடிவில வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## ஆனந்த சுதாகரனை...

மற்றும் புதுக்குடியிருப்பு மாற்றத்திற்கான அணி ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு அருகிலிருந்து மோட்டார் சைக்கிளில் பேரணியாக சென்று கிளிநொச்சி வரை கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப் பட்டது.

அரசியல் கைதியான ஆனந்த சுதாகரனை விடுதலை செய்வதற்கு உதவுமாறு அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்று முன்தினம் கொழும்பில் வட மாகாண ஆளுநரை சந்தித்து கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.(மு)


### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069

(3377) M.Suren

### வேலைவாய்ப்பு

யாழ். நகர் மத்தியில் அமைந்துள்ள ரெஸ்ரோரன்ற் ஒன்றுக்கு சமையல் உதவியாளர் தேவை.

தொடர்பு: 0770762153

(3381)

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK - 550*/=Kg

கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-1828)

### உடனடி வேலை வாய்ப்பு
### V2 TRAVELS



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?

5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்)

தகுதி - 40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

நேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம்.

0768226241

(C-1978)

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (3375)

### வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### திருமதி அற்புதம் இராசம்மா

தோற்றம்: 15.01.1926 - மறைவு: 24.02.2018

கடந்த 2018.02.24 ஆம் திகதி சனிக்கிழமை இறைபதமடைந்த எனது தாயார் அற்புதம் இராசம்மா அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி ஊடாகவும், பதாகைகள் மூலமும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அம்மாவின் 31-ம் நாள் நினைவுகூரல் இன்று (2018.03.26) திங்கட்கிழமை ஆத்ம சாந்திப் பிரார்த்தனையுடன் எமது இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்வதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

அற்புதம் வீதி,
8-ம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.
தொ.பே: 077 664 6261

இங்ஙனம்:
மகன் - அ.சற்குணதாஸ் (ஜே.பி)
(திடீர் மரண விசாரணை அதிகாரி),
குடும்பத்தினர்

(சி-1985)


HARI REAL ESTATE
A TRADITION OF TRUST

வீடு, காணி, வணிக மற்றும் அசையா சொத்துக்கள் விற்க, வாங்க நம்பிக்கையான முகவர் நிறுவனம் இப்பொழுது யாழ்நகரின் கேந்திர அமைவிடத்தில் ...

### "ஹரி றியல் எஸ்டேட்"

யாழ்ப்பாணம்
திருநெல்வேலி
நல்லூர்
புத்தூர்
கோண்டாவில்
கொக்குவில்
தெல்லிப்பளை
சுன்னாகம்
நெல்லியடி
தீவகம்

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் காணிகள், வீடுகள் மற்றும் வணிக சொத்துக்கள் மிகச்சிறந்த விலைப்பெறுமதிகளில்... உங்கள் நிலையான சொத்துக்களைக் கண்டறிய நாம் உதவுகின்றோம்... தேவையற்ற அலைச்சல்களில்லை, வெளிப்படைத்தன்மை மற்றும் குறைந்த சேவைக்கட்டணம்

பொற்பதி வீதி, நல்லூர் செட்டித்தெருவில் காணிகள் விற்பனைக்குண்டு

'ஹரி றியல் எஸ்டேட்'... நம்பிக்கையின் பாரம்பரியம்

இல.10A, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (வேம்படி சந்தி அருகாமை)

தொலைபேசி +94 21 221 4422 மொபைல் +94 70 300 4000

மின்னஞ்சல் contact@harirealestate.com

முகநூல் harirealestate.lk

POWERED BY HARI ENGINEERING AND CONTRACTORS (PVT) LTD

(C-1980)

CSE COLOMBO STOCK EXCHANGE

### பங்குச் சந்தையின் சமகால போக்குத் தொடர்பான கருத்தரங்கு

**Seminar on Current Market Conditions**

வளவாளர்:- திரு.P.அசோகன் (ஆலோசகர்- ஆசிய அபிவிருத்தி வங்கி கூட்டு முதலீட்டு திட்டம்)

காலம்:- மார்ச் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு

கொழும்பு பங்கு பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில்-கட்டணம்- 500/-

தொடர்புகளுக்கு: 021 222 1455/ 077 782 2014, 147, 2/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(C-1979)

### வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக
- அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை
- கடலுணவு, இறைச்சி ,எண்ணை வகை,மருந்துப் பொருட்கள்,பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

10, மாநகர சபை புதிய கட்டட தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

(C-1994)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.